விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4787)


சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை (25.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

## வடக்கில் வெள்ளத்தால் 73 ஆயிரம் பேர் பாதிப்பு

### அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால், 23 ஆயிரத்து 54 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 851 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

3 ஆயிரத்து 698 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 310 பேர் இடம்பெயர்ந்து 39 இடைத் தங்கல் முகாம்களில் 23

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உதவி



23


நத்தார் பண்டிகையை
கொண்டாடும்
அனைவருக்கும்
இனிய நத்தார் தின
வாழ்த்துக்கள்
- வலம்புரிக் குடும்பம்


# கூட்டமைப்பின் செயற்பாட்டை இனவாதமாக்க வேண்டாம்

## அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சிடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருமித்து செயற்படுவதை, சிலர் இனவாத நோக்கில் பார்ப்பதாக அமைச்சர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மழை தொடரும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு வட மத்திய மாகாணங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக் கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை 23

## குடும்ப பெண்ணின் சங்கிலி அறுப்பு

### வைமன் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப் பெண் ஒருவரின் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு 7.00 மணியளவில் நல்லூர் வைமன் வீதிப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. 23

### வடக்கு வெள்ள அனர்த்தம் தொடர்பில்

## கிளிநொச்சி, முல்லை அரச அதிபர்களை தொடர்பு கொண்டு விசாரித்த மகிந்த



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்களான சுந்தரம் அருமைநாயகம் மற்றும் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரை தொலைபேசியூடாக தொடர்பு கொண்டுள்ளார்.

இதன்போது அவர் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வெள்ள அனர்த்தத் 23

## நல்லூர், சாவகச்சேரி பிரதேச சபையின் - 2019

### வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர், சாவகச்சேரி பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 195 மில்லியன் 904 ஆயிரத்து 851 ரூபாய் 07 சத வருமானத்தை எதிர்பார்த்து நேற்றைய தினம் காலை 10.45 மணியளவில் நிறைவேற்றப்பட்டது.

மேலும் சாவகச்சேரி பிரதேச சபையில் 2019ஆம் ஆண் 23

## மதுபான நிலையம் இன்று மூடப்படும்

(கொழும்பு)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு இன்று நாடு முழுவதும் மதுபானசாலைகள் அனைத்தும் மூடப்படவுள்ளன.

அதனை மீறி மதுவிற்பனையில் ஈடுபடுவோருக்கு எதி 23

## வடக்கு அபிவிருத்தி ஒழுங்கு முறையில் ஏற்படுத்தப்படும்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(கண்டாவளை)

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஒரு ஒழுங்கு முறை ஏற்படுத்தப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 23

## கர்ப்பிணியை உதைத்து விழுத்தி தாலிக்கொடி அறுத்தெடுப்பு

### மீசாலையில் நேற்று மதியம் சம்பவம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் தென்மராட்சி மீசாலையில் இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவரின் தாலிக்கொடி மோட்டார்ச் சைக்கிளில் வந்த இருவரால் அறுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இக்கொள்ளைச்சம்பவம் நேற்று மதியம் 1.30 மணிக்கு மீசாலை கிழக்கு சிற்றம்பலம் வீதி 23

## பிரபாகரனின் ஆசைகளுக்கு உயிர் கொடுக்க மேற்கத்தேய நாடுகள் முயற்சி – டளஸ்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிறைவேறாது போன ஆசைகளுக்கு உயிர் கொடுக்க மேற்கத்தேய நாடுகள் முயற்சிப்பதாக, பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார். 23

## வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈட்டினை அரசு விரைவில் வழங்கும்

### அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும



(கிளிநொச்சி)

வடக்கில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டினை அரசாங்கம் விரைவில் வழங்கும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்த நிலைமைகள் தொடர்பில் பொது நிர்வாக மற் 23

# ஆழிப்பேரலையில் உயிர்நீத்த உறவுகளின் 14ம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு

வன்னிக்குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் காவுகொள்ளப்பட்டு உயிர் நீத்த உறவுகளின் 14ம் ஆண்டு நினைவு நாளான நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலய வளாகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே உறவுகள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் உறவுகளுக்கான அஞ்சலியை செலுத்துமாறு அழைத்து நிற்கின்றோம்.

தகவல்:
சிகை அலங்கரிப்பாளர் சங்கம் (சலூன்)
புதுக்குடியிருப்பு பிரதேசம். 077 626 4916

(C-4833)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1972 - 04 - 11



இறப்பு 2018 - 12 - 24

## இரத்தினராசா சிமித்கட்சன் (கட்சன்)

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கேப்பாபிலவு முள்ளியவளையை நிரந்தர முகவரியாகவும் தண்ணீரூற்று மேற்கு முள்ளியவளையைப் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராசா சிமித்கட்சன் நேற்று (24.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரலீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினராசா - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வரத்தினம் - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிந்துயன், லக்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜசிந்தன், குகனிஸா ஆகியோரின் அன்பு மாமனாரும் தருணின் அன்புப் பேரனும் மகிந்தன், முகுந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சகுந்தலாதேவி, சுதாஜினி, சிமித்வில்சன், சிமித்நியுஸ்ரன், சுபாஜினி, சிமித்வினிஸ்ரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தண்ணீரூற்று மேற்கு முள்ளியவளையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இன்று (25.12.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-4832)

தண்ணீரூற்று மேற்கு.
முள்ளியவளை.

தகவல்:- குடும்பத்தினர்
077 205 6093

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 02 1930



ஆண்டவன் அடியில் 25 11 2018

அமரர்

## பொன்னுத்துரை இராசம்மா

திதி : திருதியை

"அன்பே ஆருயிரே அருமைமிகு அம்மாவே!
கண்ணிமைக்கும் பொழுதினிலே
காலன் உனை கவர்ந்த மாயமென்ன?
ஓடி வந்ததம்மா ஓர் திங்கள் இன்றுடனே,
நாளும் பொழுதெல்லாம் நாங்கள் அழுகின்றோம்
நான்கு சட்டம் நடுவினிலே நாயகியாய்
வருவாய் என்று நாம் என்றும் எண்ணவில்லை.
அம்மா! தாயே ! அழியாத அகல்விளக்கே!
ஐயா, மகனுடனே, தில்லைக் கூத்தன் திருவடியில்
நித்திய சுகம் பெறவே நித்தம் நாம்
வேண்டுகின்றோம்"
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

அன்னாரின் மதிய போசனம் இன்று நண்பகல் சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறவுள்ளது. இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாய் ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் (C-4829)

50, சபாபதி வீதி,
தலையாழி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி தியாகராசா பூரணம் (மாம்பழம்)

பிறப்பு : 01.08.1945 இறப்பு : 22.12.2018



கொல்லம்புலம் அறிவாலயம் இமையாணனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா பூரணம் (மாம்பழம்) அவர்கள் 22.12.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலன் - நாகம்மாவின் அன்பு மகளும், மாணிக்கம் - சின்னப்பிள்ளையின் பாசமிகு மருமகளும், அமரர் புஸ்பராணி, புவனேஸ்வரன் (கனடா), குணதீஸ்வரன் (சுவிஸ்), சத்தியசீலன் (சுவிஸ்), சர்மிளா, சரிதா (கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அம்பிகா, பவளம், மலர், தர்மகுலசிங்கம் (பயில்வான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லக்கண்டு, தங்கமணி, செல்வமலர், தேவன் (பட்டு), பரஞ்சோதி, நற்குணம், சாந்தி, அமரரான சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனியும், சிவசக்தி, சுபிதா, அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ரோகித், நவீன், சஜிதன், நிகிலன், கவீன், காவ்யாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொல்லம்புலம் அறிவாலயம்,
இமையாணன்.

(C-4827)

தகவல் :
குடும்பத்தினர்

# அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

## அமைச்சர் ஹலீம் தகவல்



(கண்டி)

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஆராய்ந்து. விடுவிக்கக்கூடியவர்களை விரைவில் விடுவிக்க எதிர்பார்த்துள்ளதாக, தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத விவகார அமைச்சர், எம்.எச்.ஏ.ஹலீம் தெரி வித்தார்.

அத்தோடு தமிழ்க் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய, அவர்களை விரைவில் விடுதலை செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் கண்டிக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்ட அவர், ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

“கூட்டமைப்பிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எந்தவித ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை. இதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. எங்களுக்குள் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைக் கூறினார்கள். நாம் அதற்கு இணங்கினோம். இது தொடர்பில் எங்கள் தலைவரும் தெளிவான விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

அவர்கள் காணிப் பிரச்சினை, அரசியல் கைதிகளின் பிரச்சினை, குறித்து கூறினார்கள். கலந்துரையாடி விடுவிக்கக் கூடியவர்களை விடுவிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்” என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அடுத்துவரும் ஒருவருடத்திற்குள் ஆட்சியைக் கைப்பற்ற முடியும்!

## மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை

(மொரட்டுவ)

**அடுத்துவரும் ஒருவருடத்திற்குள் நாம் நினைத்தால் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

மொரட்டுவ பிரதேசத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘நல்லாட்சி என்று கூறிக்கொண்டு நாட்டினது பொருளாதாரத்தினை படுகுழிக்குள் தள்ளிய இந்த அரசாங்கத்தினால் மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனை மாற்றியமைக்கவே நாம் ஆட்சியைக் கைப்பற்றினோம். குறுகிய காலத்திற்குள் எம்மால் நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

இதனை நாம் எமது ஆட்சியில் நிரூபித்திருந்தோம். ஆனால் இன்று மக்கள் பல்வேறு சிக்கல்களுடன் வாழ்ந்து வருகின்றனர். ஒருவேளைஉணவை மட்டும் உட்கொள்ளும் அளவிற்கு நாட்டு மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

தற்போதைய ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்திலும் பதவியிலுமே ஆசை இருக்கின்றது. ஆனால் நாட்டிலும் நாட்டினது அபிவிருத்தியிலும் எந்தவிதமான அக்கறையும் இவர்களுக்கு இல்லை. நாம் நினைத்தால் ஒரு வருடம் கடப்பதற்குள் தற்போதைய அரசாங்கத்தை மாற்றியமைக்க முடியும்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இடதுசாரி சக்திகளை இணைத்து கூட்டணி

## ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை



(கொழும்பு)


இடதுசாரி சக்திகளை இணைத்து புதிய கூட்டணியை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய ஆலோசனைக்கு அமைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டம்நேற்று நண்பகல் நிறைவடைந்த பின்னர் ஊடக வியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## வெளிநாட்டு நீதிமன்றங்களில்

# மகிந்த,கோத்தாவிற்கு எதிராக இனப்படுகொலை குற்றச்சாட்டு





(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ,கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக வெளிநாட்டு நீதிமன்றங்களில் இனப்படுகொலை குற்றச்சாட்டினை சுமத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என கோத்தபாய ராஜபக்ஷவின் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மிலிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டரில் இதனைப் பதிவு செய்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராக பிரிட்டன் மற்றும் அமெரிக்காவை சேர்ந்த புலம்பெயர் புலிகளின் சட்டத்தரணிகள் இனப்படுகொலை குற்றச்சாட்டினை நீதிமன்றத்தில் சுமத்தவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சிவானி தியாகராஜா என்ற சட்டத்தரணியே இதற்கு தலைமை தாங்குகின்றார் என மிலிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா உட்பட யுத்தத்தின் இறுதி தருணங்களில் முப்படைகளின் தளபதிகளாக பணியாற்றியவர்களுக்கு எதிராகவும் இனப்படுகொலை குற்றச்சாட்டை சுமத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)


# மதுபானம் அருந்தி வாகனம் செலுத்திய 1,122 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மதுபானம் அருந்தி வாகனம் செலுத்தியவர்கள் 1,122 பேரும், வெவ்வேறு காரணங்களுடன் தொடர்புடைய 4,039 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 2 மணி வரையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்ததுடன், இதில் பொலிஸ் அதிகாரிகள் 17 ஆயிரத்து 728 பேர் ஈடுபட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவுமாறு விக்னேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் பெய்துள்ள தொடர் அடை மழை காரணமாக குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து தற்காலிக தங்குமிடங்களில் வாழ் ந்துவரும் மக்களுக்கு புலம் பெயர் தமிழ் மக்களும், கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணம், மலையகப் பகுதி களில் வாழும் தமிழ் மக்க ளும் தம்மால் முடிந்தளவு உதவிகளை வழங்குமாறு வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செய லாளர் நாயகமுமான. சி.வி. விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் மாற்று உடை இன்றி பெரிதும் அவதிப்படுவதாகவும் அதனால் அவர்களுக்கான மாற்று உடைகளை வழங்குவதற்கான உதவிகளையும் அடுத்த சில நாட் களுக்கான அத்தியாவசிய உலர் உணவு பொருட்களையும் வழங்கி உதவுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். குழந்தைகளுக்கான நுளம்புவலைகள் மற்றும் பால்மா ஆகிய வற்றுக்கான தேவையும் பெருமளவில் ஏற்பட்டுள்ளதாகவும் அவற்றையும் வழங்கி உதவுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு மற்றும் உடை வழங்கும் நடவடிக்கைகளை தமிழ் மக்கள் கூட்டணி மேற்கொண்டுள்ளதாகவும், அதேபோல வேறு பல அமைப்புக்களும் தொண்டு நிறுவனங்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருப்பதால் தமக்கு வசதியான வழிகளில் தமது உதவிகளை மேற்கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். முக்கியமாக மக்களின் கொடைகள் தேவையுடையோர் கைகளில் கிடைக்க வேண்டுமென் பதை ஊர்ஜிதப்படுத்துவது எல்லோரதும் கடமையாகும் என்று கூறியுள்ளார்.

யாரேனும் தமது உதவிகளை தமிழ் மக்கள் கூட்டணி ஊடாக வழங்குவதாக இருந்தால் அவர்களை உடனே தம் கூட்டணியைச் சேர்ந்த அருந்தவபாலன்-077 618 6554 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார். பொருட்கள் கொழும்பில் பொட்டலங்கள் ஆக்கப்பட்டு கிளிநொச்சிக்கு அனுப்பப்படவிருக்கின்றன. முன்னாள் முதல்வர் நாளை 26 ஆம் திகதி காலை கிளி நொச்சியில் வைத்து உதவிப் பொருட்களை தேவை உடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட பெறுநர்களிடம் அருந்தவபாலனுடனும் மற்றைய கூட்டணி அங்கத்தவர்களுடனும் கொடையினர்களுடனும் சேர்ந்து கையளிக்க உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7).

# தேசிய பாதுகாப்புத் தினம் மார்கழி-26

# அனர்த்தங்களின் போது உயிரிழந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய பிரார்த்திப்போம்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2004 ஆம்ஆண்டு சுனாமிப் பேரலை இலங்கை மற்றும் இந்துசமுத்திர கரையோரப் பகுதிகளில் பாரிய உயிரிழப்பு மற்றும் சொத்தழிவுகளை ஏற்படுத்தியிருந்தது.

இதன் விளைவாக 31.05. 2006 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்புத் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவு கூரும் அதே வேளை மாவட்டத்தில் நிலவும் அனர்த்தங்களை கருப்பொருளாகக் கொண்டு எதிர்காலத்தில் அனர்த்தப் பாதிப்புக்களை குறைத்தல், தணித்தல், தவிர்த்தல் போன்ற வற்றைப் பலப்படுத்தும் நோக்கில் முன்னாயத்த நடவடிக்கைகள் விழிப்புணர்வுகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாகவுள்ளது.

அத்துடன் இந் நினைவு கூரலானது கிராம, பிரதேச, மாவட்ட , தேசிய ரீதியில் ஓர் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பினை அனர்த்த ஆபத்து முகாமைத்துவ செயற்பாடுகளை உள்வாங்குவதற்கான ஓர் செயலாற்று கையாகவுமுள்ளது.

எனவே இத்தேசிய பாதுகாப்புத் தினத்தில் காலை 9.25- 9.27 வரையான இரண்டு நிமிடங்கள் அனைவரும் மௌனமாக இருந்து அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவு கூருவதுடன் சமய நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து இறந்த ஆத்மாக்களின் சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்களை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து மாவட்டத்தின் அனர்த்த மீட்சிதிறனை கட்டியெழுப்புவதற்கு உறுதி எடுத்துக் கொள்வோமாக என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# 10ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நல்லையா தவகுலசிங்கம் (தவம்)

(முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர் உரிமையாளர் அக்ரோ இயந்திரவியல் தொழிலகம் கோண்டாவில்)

மலர்வு: 25.02.1947 உதிர்வு: 16.12.2008

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பத்து ஆகிவிட்டாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
தேடி வரும் அனைவரையும்
உதவிக்கரம் நீட்டி உதவுபவரே!
ஆண்டவன் உங்களுக்கு ஆறுதல்
தந்துவிட்டான். ஆனால் எங்களால்
ஆறுதல் அடைய முடியவில்லை.

குடும்பத்தினர்
ஏழாலை வடக்கு, ஏழாலை. நீதிமன்ற வீதி, மல்லாகம்.
(6791)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ஆன்மீகம்சார் உளவியல் வகுப்பு
## விண்ணப்பம் கோரல்

தெல்லிப்பழை கலை இலக்கியக் களமும் சோலைக்குயில் அவைக்காற்றுக் களமும் இணைந்து நடத்தும் தர்க்க முறைமையுடன் கூடிய நடத்தைச் சிகிச்சை (DBT) வகுப்பு 2019 ஜனவரி முதல் நடைபெறும்.

காலம் : ஞாயிறு தோறும் 6 மாதம்
நடைபெறும் இடம் : இணுவில்

பங்குபெற விரும்புவோர் சுயவிபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை,

திருமதி கோகிலா மகேந்திரன்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
என்ற முகவரிக்கு 31.12.2018க்கு முன் கிடைக்குமாறு அனுப்பவும்

தொடர்பு இலக்கம்: 077 960 6133

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சொக்கலிங்கம் சண்முகலிங்கம்

J.P.U.M
சட்டத்தரணி
பிரசித்த நொத்தாரிஸ்
முன்னாள் மக்கள் வங்கி
சட்ட ஆலோசகர்

தோற்றம்:1941.04.22
மறைவு: 2018.01.04

அப்பா அருகிலிருந்து எமை வளர்த்து
அன்பு செய்தீர்
அறிவாலே எமை உயர்த்தி ஆறுதல்
அடைந்தீர்
அழகான புன்னகையும் அமைதியான உங்கள்
குணமும்
அயராத உழைப்பும் கொண்டு அகிலமதில்
புகழ்பெற்றீர்
பலகாலம் நீங்கள் வாழ்ந்து
எங்களையும் வாழ்விப்பீர்கள் என்றிருக்க
பாரினிலே எம்மையெல்லாம் பரிதவிக்கவிட்டு
பாவிகள் நாம் தேம்பியழ பரமன்தாள்
நீங்கள் சென்று ஆகியது ஆண்டொன்று
அழுகின்றோம் புலம்புகின்றோம் - ஆனாலும்
அப்பாவின் ஆத்மா அமைதியடையட்டும்
என்றெண்ணி அவர் மைந்தர்கள் நாம்
ஆறுதலடைகின்றோம்.

பண்ணாலை, தெல்லிப்பளை.
(6797)
பிள்ளைகள்:
ச.சஜீவன், ச.சஜீலன், ச.அனோஜன்

மானிப்பாயில்
அனைத்து வாழ்க்கையாளர்களுக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## ரஞ்சிற் மோட்டோர்ஸ்
(RRSC MOTORS)

HONDA

கொண்டா மோட்டார் சைக்கிளினைக் கொள்வனவு செய்து பண்டிகைக்கால சிறப்பு சலுகைகளைப் பெற்றிடுங்கள்.

எம்மிடம் குறைந்த ஆவணங்களுடன் லீசிங் செய்யும் வசதி

எம்மிடம் விசேட சலுகைகள்

அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களைக் கொடுத்து புதிய கொண்டா மோட்டார் சைக்கிளைப் பெற்றிடும் வசதி

முழுப் பணம் மூலமாக
- சிறப்புப் பரிசில்
- காப்புறுதி (மூன்றாம் நபர்)
- யக்கெட்
- இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

Special OFFER

லீசிங் மூலமாக
- சிறப்புப் பரிசில்
- பதிவுக்கட்டணம்
- காப்புறுதி
- தலைக்கவசம்
- யக்கெட்
- இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

Special OFFER

எமது சேவைகள்
மோட்டார் சைக்கிள் விற்பனை
உதிரிப்பாக விற்பனை
மெக்கானிக் அன் சேர்விஸ்

(C-4824)

rrscmanipay@gmail.com
Honda Ranjit

ரஞ்சிற் மோட்டோர்ஸ் (RRSC MOTORS)
இல.311A யாழ்.வீதி, மானிப்பாய்.
(சுதுமலைச் சந்தி அருகாமை)
T.P:021 492 7627 | 021 225 5228
077 310 7549 | 076 833 9898

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

KL
கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS

## கிருபா லேணர்ஸ்
## KIRUBAA LEARNERS

DS-589 அரச அங்கீகாரம் பெற்ற (A) தர
கனரக வாகன பயிற்சிப் பாடசாலை
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 071 454 6960, 0777 22 5292

A9 வீதி, கிளிநொச்சி,
(கச்சேரி முன்பாக)
021 - 228 - 5505
071 - 454 - 6955



(C-4825)

இல.216, A9 வீதி,
வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777
0777 - 100 - 444

இல.227/6,
கே.கே.எஸ்.வீதி,சுன்னாகம்.
(மதவடி அண்மையில்)
021-224-2022,
071-454-6956

பிரதான வீதி,
சித்தன்கேணி.
076 212 1299
021 225 2500

கண்டி வீதி,
சாவகச்சேரி.
021-227-0700
021-492-3202

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

Since 1978 நடராசா கஜந்தன்



# நியூ மைதிலி ஜுவலர்ஸ்

காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன் நகையால் மேலும் உங்கள் புன்னகை ஒளிரும். விரையுங்கள் நியூ மைதிலிக்கு

ஒரிஜினல் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP:- 021 221 7878 Fax:- 021 221 7877

newmaithily40@gmail.com
New Maithily Jewellers
0094212217878

மதிப்பிற்குரிய நியூ மைதிலி வாடிக்கையாளர்களே தங்களுக்கு மதிப்பளித்து நாங்கள் வழங்கும் 2019 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியை எம்மிடம் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

# KINGS ELECTRONICS(PVT) LTD

★SPECIAL★ ★OFFERS★

ELECTONICS | FURNITURES | BABYCARE | TOYS

## மாபெரும் மலிவு விற்பனை DECEMBER 31 வரை

மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

**LED TELEVISIONS**



3 YEARS WARRANTY

| | |
|---|---|
| Samsung 32" | -29500/= |
| LG 32" | -29600/= |
| Hisence 32" | -22900/= |
| Sony 32 | -34500/= |
| VideoCon 32" | -21500/= |
| Innovex 24" | -16900/= |
| Panasonic 32" | -27500/= |
| Abans 32" | -21900/= |
| Sony 40" | -87000/= |
| Maxmo 32" | -19500/= |
| Haier 32" smart | -28900/= |

SAMSUNG R19 REFRIGERATOR 36,900/= (10 YEAR WARRANTY)

6KG INNOVEX WASHING MACHINE 36,900/= FIVE YEAR WARRANTY

SOFA SET 3+1+1 39,900/= ONLY



5 YEARS WARRANTY

LG INVERTER REFRIGERATOR RS.67,900/= (10 YEAR WARRANTY)

OPEN 9.00AM TO 8.00PM 365 DAYS

Stand Fan Rs. 3,900 (1 YEARS)

LG TOP LOADER WASHING MACHINE 7KG WS-2107 INVERTER RS.55,900/=

Hisense 55 4K SMART RS.129,900 ONLY

LG 43" SMART RS.78,500 ONLY


SAMSUNG 43" 4K SMART RS.109,000 ONLY

3 YEARS WARRANTY

LG DVD HOME THEATRE LHD677 RS.35,900/=

HAIER WASHING MACHINE RS.36,500/=

021-4546699 | mykings.lk | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna



நல்லூர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது.
(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

## சங்கடஹர சதுர்த்தி

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவ ஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி விரதப் பூஜைகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (இ-5)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுதுவை வாழவைக்கும் வாலிபர் சங்கம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இன்று 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30மணியளவில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் சுதுவை வாழ வைக்கும் வாலிபர் சங்கத் தலைவர் செ.தருணன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்வார். (இ-5-60)

## வடக்கு மாகாண கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்புதல்

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாணக் கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக ஏற்கனவே எம்மால் சகல வலயங்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாகத் தற்போது முல்லைத்தீவு(வெலிஓயா சிங்களப் பிரிவு) வலயத்தில் ஆரம்பக்கல்வி, சிங்களம், கணிதம், சமூகவிஞ்ஞானம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் மாகாண தகவல் தொடர்பாடல்தொழில்நுட்பக்கல்விநிலையத்தில் கணனி வளவாளர் பதவிக்கும் மற்றும் சகல வலயங்களிலும் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலும் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கவேண்டிய முடிவுத் திகதியானது 2019.01.13 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ



நீர்வேலியில் அமைந்துள்ள வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கத்தினால் 2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சங்கத்தலைவர் நா.சுந்தர லிங்கம் தலைமையில் சங்கத்தின் தலைமைக்காரியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமாகிய பொ.வாசீசன் மங்கள விளக்கேற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அமரர் விமலேந்திரன் கவிதனின் இரண்டாம் ஆண்டு நினைாக இன்று யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததானம் நடைபெறவுள்ளதால் குருதி நன்கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அந்தக் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-17)

## மயானம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் புதிய மயானம் அமைப்பது தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலக மண்டபத்தில் யாழ். அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இரு பகுதி மக்களுக்கிடையே புதியமயானம் அமைப்பது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் ஆவளைதையிட்டி கடற்றொழில் சங்கம் அரச அதிபருக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய மேற்படி கலந்துரையாடல் இரு தரப்பில் இருந்தும் மூன்று அங்கத்தவர்களின் பங்குபற்றலோடு நடைபெற்றது.

கூட்டத்தில் பங்குபற்றிய ஆவளைதையிட்டி அன்னை வேளாங்கன்னிக் கடற்றொழில் சங்கத் தலைவர் இருதயராசா தெரிவிக்கையில்,

1931 ஆம் ஆண்டு நில அளவை அறிக்கையின் பிரகாரம் 15, 3/4 பரப்புக் காணி இருப்பதாக அரசாங்க நில அளவை அதிகாரி கூட்டத்தில் தெரிவித்தார் என்றும் நாங்கள் அதை அளந்து எல்லையிட்டுத் தருமாறு கோரியதுடன் அளவிடும் பணிகள் முடிவுற்றதும் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி யோசிக்கலாம் என தமது தரப்பால் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினார். (இ

## இராசி பலன்

**மீனம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படும், வியாபார விருத்தியுண்டு.

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**இடபம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தொழிலை விரிவுபடுத்த முற்படுவீர்கள்.

**மிதுனம்:** கரைந்த சேமிப்பை ஈடு கட்டும் எண்ணம் மேலோங்கும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, தொழில் மேன்மையுண்டு, தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

**கடகம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலன் கிடைக்கும்.

இராசி பலன் கிரகநிலை: செவ்; ராகு, சந்; கேது; சூரி, சனி; குரு, புதன்; சுக்

சந்திராஷ்டமம்: பூராடம், உத்தராடம்

25.12.2018
மார்கழி 10, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
திருதியை மாலை 6.01 மணிவரை
பூசம் முன்னிரவு 8.13 மணிவரை
சுபநேரம் 10.56-12.26 மணிவரை
இராகுகாலம் 3.26-4.56 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்,
நத்தார் பண்டிகை

வளவன்

**மகரம்:** எடுத்த காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** உறவினர்கள் நலன் கருதிய சுப செலவுகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், திடீர் பயணமொன்று ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**தனுசு:** பொதுவாழ்வில் கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** ஆன்றோர்களின் சந்திப்புகள் அனுகூலம் தரும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**துலாம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், யோகமான நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

# படி ரக வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 11 மாடுகள், 2 ஆட்டுக்குட்டிகள் மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணியளவில் அனுமதியின்றி படி ரக வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 11 மாடுகள் மற்றும் இரண்டு ஆட்டுக் குட்டிகள் சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொணராவின் வழிகாட்டலில் ,உப பொலிஸ் பரிசோதகர் சேந்தன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் . இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன் போது மூடிய படி வாகனத்தில்கொண்டு சென்ற 11 மாடுகளையும் ,இறந்த நிலையில் ஒரு ஆட்டுக் குட்டியும், இறக்கும் தறுவாயில் இன்னொரு ஆட்டுக் குட்டியையும் வாகனத்தில் இருந்து மீட்டுள்ளனர். வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்ததுடன், மாடுகள் மற்றும் வாகனம் ஆகியன சாவகச்சேரி பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அத்துடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சாவகச்சேரி பகுதியில் அனுமதி இன்றி மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்பட்ட மறி ஆடு ஒன்றினையும் சாவகச்சேரி பொலிஸார் மீட்டுள்ளனர். ஆட்டினை அனுமதியின்றி மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்றவர்களை கைது செய்திருப்பதாகவும் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

மேலும் அனுமதியின்றி இயங்கிய மரக்காலை ஒன்றில் காணப்பட்ட மரம் அரியும் இயந்திரம் ஒன்றினையும் சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றி இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.(இ-30)

## யாசகர்களிடையே மோதல்;ஒருவர் பலி!

(கொழும்பு)

குருவிட்ட பேருந்து நிலையத்திற்கு அருகில் இரு யாசகர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக குருவிட்டபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் கடந்த 22 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு யாசகர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் காரணமாக இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த குறித்த நபர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (இ-7)

## வெளிநாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப அரசியல் தலைவர்கள் செயற்படக்கூடாது

### ஆதிவாசி தலைவர் வலியுறுத்து



(காலி)

வெளிநாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டாம் என ஆதிவாசித் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோ அரசியல் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டவர்களிடமிருந்து காப்பாற்றப்பட்ட நாட்டை பாதுகாப்பது அரசியல்வாதிகளின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலி பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## மருந்துப் பொருட்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### துறைசார் அமைச்சர் ராஜித எச்சரிக்கை



(கொழும்பு)

நோய் எதிர்ப்பு நிவாரண மருந்துப் பொருட்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நோய் எதிர்ப்பு நிவாரணிகளின் முறையான பயன்பாடு தொடர்பாக அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற செயலமர்பின் போதே அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

சர்வதேச ரீதியில் இந்தப் பழக்கம் ஒரு பாரிய பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இந்த துஷ்பிரயோக செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு உயர்ந்தபட்ச நடவடிக்கைகளை சுகாதாரத் துறை அமைச்சால் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் க.குணரத்தினம் தங்கப் பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 8ம் திகதி மார்கழி மாதம் 2017 இற்கு பின்னர் பட்டம் பெற்ற தூய, பிரயோக விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:-

எதிர்வரும் 34வது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தில் (பகுதி-1) பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப் பட்டம் அளிக்கப்படவிருக்கும் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்கள் தங்கப்பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவார்.

விண்ணப்பப்படிவங்களை கீழக்காணும் ஒருமுகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1. உதவிப்பதிவாளர், கல்விவிவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வவுனியா வளாகம், வவுனியா.
3. இணையத்தளம்: www.jfn.ac.lk

முடிவுத்திகதி:07.01.2019 (திங்கட்கிழமை)

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும், தெளிவற்றதும், பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

முக்கிய குறிப்பு:விஞ்ஞானபீட மாணவர்கள் உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் விண்ணப்பிக்க முடியும்.

(சி-4819) பதிவாளர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 8ம் திகதி மார்கழி மாதம் 2017க்கு பின்னர் பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தி, எதிர்வரும் பட்டமளிப்பு (பகுதி- I) வைபவத்தில் இளமாணிப் பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை கீழ்காணும் ஒரு முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1.உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2.பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வவுனியா வளாகம், வவுனியா.

3.www.jfn.ac.lk இணையத்தளம்

விருதுகள்:- பல்கலைக்கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

முடிவுத் திகதி: 07.01.2019 (திங்கட்கிழமை)

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும், தெளிவற்றதும் பூரணப் படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

முக்கிய குறிப்பு: முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம், மருத்துவ பீடம் மற்றும் விஞ்ஞான பீட மாணவர்கள் உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் விண்ணப்பிக்க முடியும்.

(சி-4820) பதிவாளர்

திரேசா தளபாடம்
THERESA FURNITURE
உங்கள் இல்லங்களுக்குத் தேவையான தளபாடங்களை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ளலாம்


137, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7941
137, Kasthuriar Veethy, Jaffna

# இழப்புக்களை மதிப்பிடுவதற்கு விசேடகுழு நியமிக்கப்பட்டு நட்டஈடு வழங்க நடவடிக்கை

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் உறுதி

(கண்டாவளை)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகள் தொடர்பில் விசேட குழு நியமிக்கப்பட்டு விரைவாக அவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்



வட பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி தேவைகள் குறித்து ஆராய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர், இயற்கை அனர்த்தம் காரணமாக வடக்கில் அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன குறிப்பாக கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது உடனடி தேவைகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இதற்காக தேவைப்படும் நிதி தொடர்பிலும் இந்த நிதியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. உதவிகள் கிடைத்தவுடன் அதற்கான நிதி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு பாதிப் புகளை மதிப்பிடுவதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் மூலம் விரைவாக மதிப்பீடு செய்யப்பட்டு உதவிகள் .நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# வவுனியாவில் 132 குடும்பங்கள் பாதிப்பு; மழை தொடருமாகில் விவசாயச்செய்கையில் அழிவு ஏற்படும்

## அரச அதிபர் ஹனிபா எச்சரிக்கை

(குருமன்காடு)


நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் பாதிப்படைந்துள்ளனர் என மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தெரிவித்துள்ளார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் மழை காரணமாக வவுனியா வடக்கு பகுதி பாதிப்படைந்துள்ளது. அதன்படி வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், கனகராயன்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், நைனாமடு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேரும், மன்னகுளம் கிராம அலுவலர் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேரும், மாறா இலுப்பை கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும், கற்குளம் கிராம அலுவலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும், கனகராயன் குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேருமாக மொத்தம் 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அத்துடன், மழை தொடரும் பட்சத்தில் பாதிப்புக்கள், விவசாய அழிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# மருதமடுகுளத்தின் கலிங்கு சேதமடைந்து புனரமைப்பு



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் குளங்களின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்து வான்பாய ஆரம்பித்தது.

இந்நிலையில் பெய்த கடும் மழையை அடுத்து மருதமடுக் குளத்தின் கலிங்கு சேதமடைந்த நிலையில் தற்காலிக புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் புதுக்குடியிருப்பு கைவேலி மருதமடு குளத்தின் கலிங்கு வழியாக நீர் வேகமாக வெளியேறிய நிலையில் கலிங்கில் பாரிய உடைவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், கைவேலி மற்றும் கோம்பாவில்கமக்கார அமைப்புக்கள் மற்றும் இராணுவம், புதுக்குடியிருப்புப் பொலிஸார் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள் ஒன்றிணைந்து நீரின் வேகத்தை குறைக்கும் முகமாக மண்மூடைகளை அடித்து தற்காலிகமாகப் பாரிய அழிவைத் தடுக்கும் முகமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (2-281)

# 2 ஆயிரத்து 64 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் தங்கல்

**கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் நேற்றைய தகவல் படி**

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் 11 ஆயிரத்து 688 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 534 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் நேற்றைய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் 20 நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 64 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 882 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வெள்ளப் பாதிப்பினால் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஏழு வீடுகள் முழுமையாகவும் 221 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

**கரைச்சி**

கரைச்சிப் பிரதேச செயலகப்பிரிவில் 2 ஆயிரத்து 612 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 706 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 390 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 250 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர்.

**கண்டாவளை**

கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவில் 7 ஆயிரத்து 520 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 499 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஆயிரத்து 580 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 327 பேர் 11 முகாம்களில் தங்கியுள்ளனர்.

**பச்சிலைப்பள்ளி**

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 556 குடும்பங்களில் 5 ஆயிரத்து 329 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 94 குடும்பங்களைச்சேர்ந்த 305 பேர் 4 முகாம்களில் தங்கியுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# வவுனியா நகரசபை பாதீடு நிறைவேற்றம்

(குருமன்காடு)

வவுனியா நகரசபையின் அடுத்தாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வவுனியா நகரசபையில் அண்மையில் இடம்பெற்ற அமர்வின் போது வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் இடம்பெற்றது.

இதன்போது, கூட்டமைப்பு உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் வட்டார ரீதியாக ஒதுக்கப்பட்ட நிதியில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் தவிசாளருக்கு ஆதரவளித்த உறுப்பினர்களின் வட்டாரங்களுக்கு அதிக நிதியொதுக்கப்பட்டுள்ளது.

உண்மையில் உறுப்பினர்களுக்கு நிதியொதுக்காது ஒவ்வொரு வட்டாரத்தின் தேவைக்கேற்ப சரியாக நிதியை பாதீடு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர்களான சு.காண்டீபன், ரி.கே. இராஜலிங்கம், க.சுமந்திரன், ந.சேனாதிராஜா, எஸ். ரூபன் ஆகியோரும் இக் கருத்தை வரவேற்று தமது வட்டாரங்களுக்கும் பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாகவும் வருமானம் கூடிய வட்டாரங்களுக்கு குறைவான நிதியும் வருமானம் குறைந்த வட்டாரங்களுக்கு கூடிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினர்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான பாரி மற்றும் லரீவ் தமது வட்டாரங்களில் இரு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் வசிப்பதாகவும் அங்குள்ள தேவைப்பாடுகள் தொடர்பிலும் தெரிவித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் செபநேசராணி தமது வட்டாரத்தில் அதிக உறுப்பினர்கள் உள்ளதால் நிதியொதுக்கீடு சரி எனத் தெரிவித்தார். இதனையடுத்து சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இறுதியில் நகரசபை பாதீடு கூட்டமைப்பு உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைவாக தவிசாளரால் பொது வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளிலிருந்து மீளப்பெற்று வட்டார அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டன.

இதனையடுத்து'வவுனியா நகரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (2-250)

# நானாட்டானில் சர்வதேச சிறுவர், முதியோர் மாற்றாற்றல் உடையோர்களுக்கான நிகழ்வு



(மன்னார்)

நானாட்டான் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றாற்றல் உடையோர் தின நிகழ்வு நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் நானாட்டான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச செயலர் சி.ஏ. மோகன்றாஸ்கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி, உப தவிசாளர் புவனம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட செயலாளர் மோகன்றாஸ் உரையாற்றும் போது,

நாம் வாழும் சமூகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவர்கள் சிறார்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள்.

மூத்தவர்களையும் சிறார்களையும் மாற்றுத்திறனாளிகளையும் நாம் மிகவும் மரியாதைக்கு உரியவர்களாகப் பார்க்க வேண்டிய பாரிய பொறுப்பு நமக்கு இருக்கின்றது.

சில நேரங்களில் ஆராய்ந்து பார்த்தால் இளைஞர்களைவிட முதியவர்களே பலம் வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். பலம் என்பது உடல் பலம் அல்ல. மனோ பலம். உடல் வலுவிழந்த போதும்தனது மனோ பலத்தால் சமூகத்தில் பிள்ளைகள் துணையின்றி வாழும் எத்தனையோ முதியவர்களை நாம் கணக்கால் காணக்கூடியதாக உள்ளது.

மூத்தவர்களை மதித்து பாதுகாக்க வேண்டும். அவர்களிடமிருந்து அனுபவங்கள், நல்ல பாடங்களை கற்று இளைஞர்களும் சிறுவர்களும் வாழ்வில் மேன்மை நிலையை அடைய வேண்டும்

சிறுவர்களைப்பொறுத்த மட்டில் அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்து கொடுப்பவர்களாக நாம் இருக்க வேண்டும்.

அத்துடன் அவர்களை நாம் மன ரீதியாக பக்குவப்படுத்தும் போது தங்களுக்கு உரிய வயதில் உடல் ரீதியாக பலம் பெற்றுக் கொள்வார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகள் மீது அதிக கவனம் எடுத்துக்கொள்வது ஒன்றுதான் சிறுவர்கள் எதிர்காலத்தில் நல்வாழ்வை அடைய ஒரே வழி என்று தெரிவித்தார். (2-285)

# குடிநீர் வழங்கக்கோரிக்கை

(கிளிநொச்சி)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் அதிக சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்படுகின்றபோதும் தாம் வீடுகளுக்குச் சென்றாலும் தமக்குச் சுத்தமான நீர் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

குளத்து நீர் மட்டம் குறையாத நிலையில் தமது கிணறுகளைச் சுத்தம் செய்யமுடியாதென்றும் தமக்கு உதவி புரிந்து வருகின்ற கருணை உள்ளங்கள் தமக்குத் தேவையான சுத்தமான குடி தண்ணீர் போத்தல்களை அதிகளவில் வழங்க முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கிளிநொச்சிக்கு நேற்று விஜயம்



## வெள்ள அனர்த்தம் தொடர்பில் ஆராய்வு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்றைய தினம் விஜயம்மேற்கொண்ட பொது நிர்வாக மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார வெள்ள அனர்த்தம் தொடர்பில் கிளிநொச்சியில் விசேட கூட்டம் ஒன்றை நடத்தினார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பில் பொது நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று காலை 10 மணிக்கு விசேட கூட்டம் இடம்பெற்றது.

திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் கடும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் முகமாக இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகள் அவர்களின் வாழ்வாதார அழிவு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை வழமைக்கு திரும்புவதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள், உதவிகள் பற்றியும் இவ்விசேட கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரத்து 889 குடும்பங்களைச் சேர்ந்த 35ஆயிரத்து 808 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 20 நலன்புரி நிலையங்களில் 2ஆயிரத்து64 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 882 பேரும் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் 755 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து592 பேரும் உள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலக பிரிவுகளை கொண்ட 77 கிராம அலுவலர் பிரிவுகளில் 6 ஆயிரத்து 250 குடும்பங்களைச் சேர்ந்த 20ஆயிரத்து 737 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் 28 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, சாள்ஸ் நிர்மலநாதன், சி சிறிதரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க சு.அருமைநாயகம், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர், திணைக்களங்களின் பணிப்பாளர்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த இராணுவத்தினர், பொலிஸார் என பலர் கலந்துகொண்டனர். (2-315)

# கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருட்களை வழங்க சென்றவர்களுக்கு இடையூறு

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில், கண்டாவளை மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை வழங்கச் சென்ற பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள் ஆகியோரை கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து பிரதேச செயலக வாகனங்களைத் தடுத்து நிறுத்தியமை தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை 3 மணியளவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டாவளைப்பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம்மாலை முதல் நாகேந்திரபுரம் வித்தியாலயம், முரசுமோட்டை முருகானந்த ஆரம்பப் பாடசாலை, முருகானந்தக் கல்லூரி, கண்டாவளை மகா வித்தியாலயம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கான உதவிப்பொருட்களை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பல்வேறு அமைப்புக்களாலும் வழங்கப்பட்ட பெருந்தொகையான குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கட் போன்ற உடனடித் தேவைக்குரிய பொருட்களை நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் பிரதேச செயலர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் மற்றும் பொருளாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் பொருட்களை விநியோகித்துக் கொண்டிருந்த சமயம், நலன்புரி நிலையத்திற்குள் சென்ற கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தரிடம் பொருட்களை வழங்க முடியாது என்றும் தடுத்து தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர்.

இதனையடுத்து, பொருட்களை வழங்கி விட்டு அலுவலகத்திற்கு திரும்பிய பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள் பயணித்த வாகனத்தை செல்லவிடாது தர்க்கப்பட்டதுடன், கண்டாவளை கமக்கார அமைப்புக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தையும் வீதியில் நிறுத்தி இரண்டு வாகனத்தையும் தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து சுமார் 1.30 மணிநேரம் இவ்வாறு பிரதேச செயலர் மறிக்கப்பட்டதை தடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு பொலிஸாரின் உதவியுடன் பிரதேச மற்றும் உத்தியோகத்தர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (2-315)

# நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு அமைச்சர் மத்தும உறுதி



(கண்டாவளை)

கடன்களைப் பெற்று விவசாயத்தை செய்தபோதும் அவை வெள்ளத்தினால் அழிவடைந்ததால் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சிக்கு நேற்றுக் காலை 9.30 மணியளவில் விஜயம் செய்த இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை சந்திக்கும் பொருட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம் மற்றும் கிளி/ முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்டு கலந்துரையாடினார்.

இதன் போது அமைச்சரிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த எமக்கு வெள்ள அனர்த்தத்தினால் வாழ்வாதாரம் முழுமையாக அழிவடைந்துள்ளது.

இதனால் எதிர்காலத்தின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது என்று கவலையுடன் குறிப்பிட்டுள்ளனர்.

அதாவது வங்கிகளில் கடன் பெற்று மேற்கொண்டுள்ள காலபோக நெற்செய்கை அழிவடைந்துள்ளது. இதனைவிட வாழ்வதற்காக வழங்கப்பட்ட கால்நடைகள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பனவும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ளனர். இப்பாதிப்புக்கள் தொடர்பில் ஆராயப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (2-315)




# மாவட்ட செயலகங்கள் கோருகின்ற நிதி விடுவிக்கப்பட்டு நட்டஈடு வழங்கப்படும்

## அமைச்சர் மத்தும தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்கள் கோரிக்கை விடுக்கும் நிதி விடுவிக்கப்பட்டு மக்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்படும் என பொது நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் வெள்ள அனர்த்தம் தொடர்பாக அமைச்சர் தலைமையில் ஆராயும் விசேட கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வெள்ளம் அனர்த்தம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகள் மற்றும் அவசர உதவிகள் குறித்த கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மக்களுக்கும் அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் அதற்கான நட்டஈடுகள் வழங்கப்படும்.

அதற்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டச் செயலகங்கள் கோருகின்ற நிதி விடுவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த உதவிகள் அனைத்தும் விரைவாக வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (2-281)

# வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் மன்னாரில் சேகரிப்பு

(மன்னார்)

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர் காரணமாக அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக முல்லைதீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை சேகரிக்கும் பணிகள் தற்போது மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

தன்னார்வம்மிக்க இளையோர்களால் நேற்று முன்தினமும் நேற்றும் மன்னார் பொது விளையாட்டு அரங்கில் நிவாரணப் பொருட்களைச் சேகரிக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் நேற்றைய தினம் மன்னார் மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களிடம் நிவாரணப் பொருட்கள் சேகரிக்கும் வேலை இடம்பெற்றது.

நிவாரணப் பொருட்கள் சேகரிக்கும் வேலைக்கு மன்னார் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை தந்துதவுமாறும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் மற்றும் மன்னார் நகரசபை தலைவர் உட்பட அனைத்து அங்கத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேகரிக்கப்பட்ட பொருட்களுடன் உதவிக்குழு ஒன்றும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வெகு விரைவில் செல்ல இருப்பது குறிப்பிடத்தக்கது. (2-285)

# செய்தி ஊடகமாகவே மாறுகின்ற விழா கிறிஸ்து பிறப்பு விழா



ம.பிரான்சிஸ்க்
தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை ஆசிரியர்,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

இறைவன் தனது இருக்கையில் இருந்து கற்பிக்கின்ற வேதம் மனிதனின் இதயத்துக்குள் நுழைய மறுத்தபோது இறைவனே இறங்கி வந்து வேதமானார். சிலுவையில் பாடமானார். இது வருடம்தோறும் வந்துபோகும் நத்தார் மகிழ்ச்சியை வெளிக்காட்டும் காலம்மட்டுமல்ல வறியோரோடு பகிர்ந்து, கண்ணீர் துடைக்கும் கருணைக் காலம். இதுவாழ்வை வளப்படுத்தும் நாட்களல்ல. வாழ்வில் திருத்தம் ஏற்படுத்திக்கொள்ளும் நாட்கள். கல்வாரிக் குன்றில் எமக்கு பாடமாகி இன்று மீண்டும் ஒருமுறை எமக்கு ஊடகமாகவே பிறந்திருக்கும் இயேசுவோடு கைகோர்த்துக் கொண்டு அவரோடு சேர்ந்து நடக்கும் காலம். இயேசுவின் வாழ்க்கைப்பதிவுகள் எம் இதயத்தில் ஏற்படுத்திய அதிர்வுகள் எவை. அவரது பாதப்பதிவுகளில் வேதம்படிப்போம். பேதங்கள் இல்லாத சமத்துவப்பூமியைப்படைப்போம். உலகில் அவர் மாறியதைப்போல் நாமும் ஊடகமாகவே மாறுவோம்.

தொடர்பாடலில் எங்காவது- தொடர்பாளனும், செய்தியும், ஊடகமும் ஒரே தொடர்பாடல் பண்புக்கூறாக மாறமுடியுமா? அதாவது இவை மூன்றும் ஒன்றாகி ஊடகமாக மாறமுடியுமா? முடிந்தது 2000 வருடங்களுக்கு முன்பே இயேசுவின் வருகையால் நிகழ்ந்துள்ளது. எவ்வாறு எனப்பார்ப்போம்,


மனிதன் சமூகமாக வாழத் தொடங்கிய நாள்முதல் ஊடகங்கள்- செல்வழிகள் மனிதவாழ்வில் விலக்கிவிடமுடியாததாகிவிட்டன. மனிதனை சமூகப்பிராணியாக மாற்றியது ஊடகங்களே. இன்று மனிதன் தனது தொடர்பாடலுக்காக மரபு ஊடகங்களிலிருந்து புதிய ஊடகங்களுள் சென்றுள்ளான். ஆனால் அவை அவனுக்கு அறிவுகளை வழங்கும் தொடர்பாடல் சாதனங்களாக இருக்கும் நிலையிலிருந்து மாறி மனிதர்களை சாதனங்களாக மாற்றியுள்ள அவலநிலையை அவனியெங்கும் காணமுடிகிறது. எனவே ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் சாட்சியாக உருமாற வேண்டும் என்பது காலத்தின் கட்டாய தேவையாகிறது. அம்மாற்றம் அவனைப் புனிதப்படுத்தி தன்குடும்ப வாழ்வை மேன்மைப்படுத்தி, வாழும் சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் வகையில் அமையவேண்டும். மாற்றம் மனித நேயத்தையும் இறைமையையும் காப்பதாக இருக்கவேண்டும். உலக வரலாற்றைப் புரட்டிப் போட்ட இயேசுவின் இறையாட்சிப்பாதை நம்முடைய அகக்கண்களுக்கு ஒளியூட்ட வேண்டும். பட்டுப்போன நம்வாழ்வெனும் நம்பிக்கை மரங்களுக்கு வசந்த காலமாய் மாறவேண்டும்.

**Communication** என்னும் ஆங்கிலச் சொல்லின் அர்த்தமுள்ள விளக்கம்: பொதுவானதாக்குதல் அல்லது எமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் எனலாம். பொதுமை காண ஏற்படும் உறவு அல்லது தொடர்புப்பரிமாற்றம் எனவும் கூறலாம். இன்று மனிதரின் அடிப்படைத்தேவைகளுள் ஒன்று உறவுப் பரிமாற்றம். இதனையே இந்தசொல்லும் குறிக்கின்றது. இத்தொடர்பு அல்லது உறவுப்பரிமாற்றத்தின் நோக்கம்: ஒருவர் தன்னையே முழுமையாக அறிந்து வளர்த்துக் கொள்ளுதல். பிறரோடு அர்த்தமுள்ள உறவுகொள்ளுதல், தான்வாழும் உலகத்தைப் புரிந்துகொண்டு செயற்படுதல் போன்றன சிலவாகும். காலத்தின் அவசியமாகப் புகுந்துள்ள இத்தொடர்பாடல் ஊடகங்கள் அனைத்துமே இந்த நோக்கில் செயற்பட வேண்டும் என தொடர்பியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இத்தொடர்பு-உறவுப் பரிமாற்றத்திற்கு பண்புக்கூறுகள்- மூலக்கூறுகள் இருப்பதை தொடர்பியல்அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த தொடர்பாடல்பண்புக்கூறுகளை வைத்து அவற்றின் செயற்பாட்டின் படி வரிசைப்படுத்தி தொடர்புபடுத்துவதன் மூலம் தொடர்பாடல் மாதிரிகளை அவ்அறிஞர்கள் உருவாக்கியும் உள்ளனர்.

இந்த நிபுணர்களின் கருத்துக்களின்படிதொடர்பாடலில் ஈடுபடுகின்ற நபர்களின் எண்ணிக்கையை அளவுகோலாக வைத்து பார்க்கின்ற போது தொடர்பாடலை நான்கு வகைகளுக்குள் எடுத்து நோக்கலாம்: "தன்னகத் தொடர்பாடல், ஆள்களிடைத் தொடர்பாடல், குழுத் தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடல்." அதேபோல் உறவை அளவுகோலாக வைத்துப் பார்க்கின்ற பொழுது தொடர்பாடலை ஆறு வகைக்குள் நோக்கலாம்: "தன்னகத் தொடர்பாடல், ஈர்ஆள்கள் தொடர்பாடல், குழுத் தொடர்பாடல், சமூகத் தொடர்பாடல், இயற்கைத் தொடர்பாடல், இயற்கைக்கு அப்பாற்பட்ட தொடர்பாடல். தொடர்பாடல் பற்றிய எளிமையான வரை விலக்கணம் தந்த தொடர்பியல் அறிஞர்களான ஹெரோல்ட் டீலாஸ்வெல், ஷனொன் மற்றும் வீவர் அவர்களில் தொடர்பாடல்மாதிரியில் "தொடர்பாளன்-தகவல் மூலம், செய்தி, செல்வழி- ஊடகம், பெறுநர், தாக்கம், தடை" போன்ற பண்புக்கூறுகளை காணமுடியும்.

நாம் வாழும் இத்தொடர்பு உல



கின் காலச்சூழலில் இவைகளில் எந்தபண்புக்கூறு இன்று எம்மத்தியில் பிறந்துள்ள இயேசு கொண்டு வந்த நற்செய்திப்பணிக்கு அதிகம் தேவை? என வினா எழுப்பி விடை தேடவேண்டிய உலகில் நாம் வாழ்கின்றோம். இந்த வினாவை மேலோட்டமாக பார்த்தால் வியப்பாக இருக்கும். இங்கு காணப்படும்எல்லா வகையான பண்புக்கூறுகளும் இயேசு கொண்டுவந்த நற்செய்திப் பணிக்கு அவசியம் தேவையாகுகின்றன என்பது வெள்ளிடைமலை. எனவே மிக ஆழமாகப் பார்த்து அதன் அர்த்தத்தை காண நாம்முனையும் போது இந்த வினா பொருள் பொதிந்ததாகிவிடும்.

இங்கு 2ஆம் வத்திக்கான் சங்கம் குறிப்பிடுவதை சுட்டிக்காட்டுவது சாலச்சிறந்தது: "நவீன, புதிய ஊடகங்கள் திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப்பணிக்கு இறையாட்சியின் மதிப்பீடுகளை மானிட சமுதாயத்தில் நிலைபெறச் செய்யும் அதன் செயற்பாட்டிற்கு உதவிட முடியும்" என்பதாகும். ஒருவிதத்தில் கடவுள் மனிதனுக்கு வழங்கிய படைப்பாற்றலின் பரிமாண வளர்ச்சிதான் ஊடகங்கள் எனலாம். இவற்றில் பல இன்று ஊறகங்களாக மாறிவிட்டன. ஏனெனில் இவை வழங்கும் பேறுகளை விட ஊறுகள் அதிகமாகும். நன்மைகளை விட தீமைகள் அதிகரித்து விட்டனவோ என எண்ணத் தோன்றுகின்றன. காலத்தின் அவசியமாகப் புகுந்துள்ள இந்த தொடர்பாடல் ஊடகங்கள் அனைத்துமே உறவாடவும் தான் வாழும் உலகத்தைப் புரிந்துகொள்ளவும் தன்னை வளர்த்துக்கொள்ளவும் வேண்டிய நோக்கில் செயற்பட வேண்டும் என தொடர்பியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால் ஊடகங்கள் வாழ்வின் வகை-வரை மாதிரிகளையும் வாழ்க்கைப் போக்குகளையும் அவர்களின் தேவைகளையும் காட்டுவதாகவும் நிர்ணயிப்பதாகவும் உள்ளன. இன்று சரியான பங்கேற்பும், சித்திரிப்பும் இல்லாத சூழலில் எந்த ஊடகத்திலும் யார் சொல்லுகின்றார்? யாருக்காகச் சொல்லுகின்றார்? என்ன சொல்லுகின்றார்? எந்தக்குறிக்கோளை மறைத்து சொல்லுகின்றார்? எந்த சாதனத்தின் மூலம் சொல்லுகின்றார்? எதை எதிர்பார்த்துச் சொல்லுகின்றார்? என்ற கேள்விகளுக்கு ஆழமான விடைகளைத்தேடமுதலில் நாம் விமர்சனமிக்க பெறுநரின் பண்புகளான: செய்தியை பகுப்பாய்வுசெய்தல், பொறுப்புணர்வுடன் நுகர்வு செய்தல் போன்ற தேர்ச்சிகளை உருவாக்கிட எம்மில் வேண்டும். இன்றைய சமூகத்தோரின் வாழ்க்கையில் நிகழ்கின்ற மாற்றங்கள் பெரும்பாலும் ஊடகங்களை அடிப்படையாக வைத்துத்தான் நிகழ்கின்றன என்று சொன்னால் யாரும் மறுப்பதற்குமில்லை. ஊடகங்கள் வாயிலாக மக்களின் நடத்தை மாற்றப்படுகின்றது. ஊடகத்தால் தனியாள்களின் நாளாந்த நிகழ்ச்சிநிரல் தீர்மானிக்கப்படுகின்றன. மக்களின் எண்ணங்கள் மனப்பாங்குகள் ஊடகத்தாலேயே நடத்தப்படுகின்றன. ஊடகங்களின் ஊடுருவல் மனிதனை ஒழுக்கமில்லா வாழ்க்கை முறைக்குள் விழுத்தி அதிலிருந்து எழமுடியா வண்ணம் அழுத்துகின்றன. இதனால் அறநெறிகளை இழந்துவரும் சமுதாயத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். ஏற்றத்தாழ்வுகளை எங்கும் நிலைநிறுத்தி, தவறுகளை நியாயப்படுத்தி, சமூகத் தீமைகளைப் பெருக்கிட முயல்பவர்களை முன்னுதாரண நாயகர்களாக ஏற்கும் சமூகத்தில் நாம் வாழ்கின்றோம். வன்முறைகளை வழிமுறைகளாகக் கொள்ளும் மனிதரை சிறந்தவர்களாக முன்னிறுத்தும் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அற்ப பதவிகளுக்கும் புகழ்களுக்கும் நகரங்களுக்கும் பிரதேசங்களுக்கும் சபைகளை தேடி ஓடிக்கொண்டிருக்கும் மனிதர்களை நம்பி கொள்கைகளை இழக்கும் சமூகத்தின் நடுவில் வாழ்கின்றோம்.

இந்த இடத்தில் ஜோசப் பிளாபார் என்னும் தொடர்பியல் அறிஞர் கூறும் வார்த்தைகளை நோக்குவது சாலச் சிறந்தது:"இன்றைய சமூகத் தொடர்புச் சாதனங்கள் இன்றைய சமூகத்தில் நடக்கக்கூடிய அநியாயங்களை, அநீதி அமைப்பு முறைகளை, நியாயப்படுத்தி நிரந்தப்படுத்துகின்றன. அரசு தன் சுயநலத்திற்காக, கட்சியின் வளர்ச்சிக்காகப் அதனைப் பயன்படுத்துகிறது. ஏனெனில் சமூகத் தொடர்புச் சாதனங்கள் அரச கைகளிலும் பணக்காரர்களின் கைகளிலும்தான் இருக்கின்றன."எனவே நாம் ஒழுக்க நெறிகளுடன் நல் மனப்பாங்குடன் நாளாந்த வாழ்வை நடத்திச் செல்ல நாம் பின்பற்றக்கூடிய ஓர் ஒழுங்கான- சரியான ஊடகம் எமக்கு தேவை என்பது உண்மை. இன்றைய இந்த நிலையில் எத்தகைய தொடர்பாடல் பண்புக்கூறு இன்று எம்மத்தியில் பிறந்துள்ள இயேசு கொண்டுவந்த நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு அதிகம் தேவை? அல்லது அதிகம் அழுத்தம்பெறவேண்டிய தொடர்பாடல் பண்புக்கூறு என்ன? என எம்மை நாம் கேள்வி கேட்கவேண்டும்.

நற்செய்திப் பணியில் மூன்று முக்கிய விடயங்கள் இருப்பதாக இரண்டாம் வத்திக்கன் சங்க ஏடும், ஆசியத் திருச்சபை ஏடுகளும் வலியுறுத்துகின்றன:"நற்செய்தி அறிவிப்பு, உரையாடல், மனித மேம்பாடு." இவற்றை வைத்துப் பார்க்கும்போது ஒப்பீட்டு ரீதியில்: "தொடர்பாளன்-செய்தி-ஊடகம்" ஆகிய மூன்றுதொடர்பாடல் பண்புக்கூறுகள் நற்செய்திப்பணிக்கு மிகப் பொருத்தமாகும் என நாம் உறுதிபடக்கூறலாம். ஆம் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு-தாக்கமிகு நற்செய்திப் பணியைச் செய்வதற்கு தொடர்பாளன்-செய்தி-ஊடகம் ஆகியன அழுத்தம் பெறவேண்டும். இங்கு தொடர்பாளனும் செய்தியும் ஊடகமாகவே மாறவேண்டும்.மாறினால் இந்நற்செய்தி பணி நானிலமெங்கும் நன்றக போதிக்கப்படும் என்பது உண்மை.

இங்கு ஊடகம்தொடர்பாக தொடர்பியல் அறிஞர் மார்சல் மக்லூகன் **(Marshall McLuhan)** தனது **"Understanding Media- The extensions of man"** என்னும் புத்தகத்தில் குறிப்பிடும் ஒரு விடயத்தை இங்குகுறிப்பிடுவது சாலப் பொருத்தம்:**"The Medium Is the Message"**-தாக்கமிகு தொடர்பை ஏற்படுத்துவதற்கு ஊடகம் செய்தியாக மாறவேண்டும் அல்லது செய்தி செல்வழியாக-ஊடகமாக மாற வேண்டும்என்கிறார். இவருடைய இந்த கூற்று இன்றைய காலகட்டத்தில் அழுத்தம் பெறவேண்டும். இது நடைபெற முடியுமா? செய்தி வேறு. ஊடகம் வேறு.இவை இரண்டும் தொடர்பாடல் பண்புக்கூறுகளுள் இருவேறுபட்ட பண்புக்கூறுகள் ஆகும். மார்சல் மக்லூகன் அவர்களின் கருத்துப்படி: செய்தி செல்வழியாக மாறமுடியுமா? வெறும் கண்ணோட்டத்தில் இது நிகழவே முடியாது. ஆனால் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் இயேசு. இயேசு என்னும் தொடர்பாளரின் வாழ்வு மிகச் சிறந்த சான்றாகிறது. அவர் செய்தியாளராக இருந்து கொண்டு கடவுளின் நற்செய்தியை: அன்பை, மீட்கும் வல்லமையை, மன்னிப்பை பல்வேறு போதனைகள், அருள் அடையாளங்கள் வழியாக எடுத்துக்காட்டினார். தம்பணியைத் தொடர்ந்து ஆற்றுவதற்கு சீடர்களை குழுவாக்கி பயிற்றுவித்தார். இறுதியாக இயேசு என்னும் செய்தியாளர் செய்தியாகி, செல்வழியாகி, சிலுவையிலே அறையுண்டு தியாகமாகி கடவுளன்பை வெளிப்படுத்தினார். அவருடைய பாடுகளில், மரணத்தில்,உயிர்ப்பில் அவர் கொண்டு வந்த செய்தி ஊடகமாகவே மாறுகிறது. இங்கு செய்தியாளரும் செய்தியும் செல்வழியும் ஒன்றாகி ஊடகமாவதைக் காண்கின்றோம். இந்த இடத்தில்பைபிளில்யோவான் நற்செய்தி புத்தகத்தில் முதலாம் ஆதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட வேத வார்த்தைகளை நோக்குவோம்: "தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அவரிடம் வாழ்வு இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில்ஒளிர்ந்தது. இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை.வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம் அருளும்உண்மையும்நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரேமகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்."

எனவே நற்செய்தியின் கருப்பொருள் இயேசுவே, நாம் ஒவ்வொருவரும் அன்பின் ஊடகமாக மாறவேண்டும். சொல் வழிவேறு, செல்வழிவேறு, செய்திவேறு, செய்தியாளன் வேறு, என்றில்லாமல்செய்தியாளன், சொல்வழி, செல்வழி, செய்தி இவை அனைத்துமாக நாம் மாறி ஒன்றாக வேண்டும். இறைவனையும் மனிதனையும் இணைக்கும் ஊடகமாக திகழ இயேசு மண்ணில் மனிதனாகப் பிறந்தார். ஒருவருடைய வார்த்தையை விட அவரது வாழ்க்கையே உரக்கப்பேசும் என்பார்கள். வார்த்தைகளுக்கும் வாக்குறுதிகளுக்கும் இடையே. தீமையை கைவிடு நன்மை யைக் கைப்பற்றுவோம். வாழ்வில் ஊடகமாக மாறுவோம். உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்றுரைத்த.யேசு, இக்கிறிஸ்து பிறப்புக்காலத்தில் எம்மை நற்செய்தியாகவும் ஊடகமாகவும்வாழ அழைக்கிறார். தொடர்புசாதனங்கள் வளர்க்க வேண்டிய மதிப்பீடுகள் தேய்ந்த நிலையிலும் தேக்க நிலையிலும் இருக்கும் இக்காலத்தில் எமக்காக ஊடகமாக மாறிய இயேவைத் தொட முயல்வோம். இயேசுவால் தொடப்பட்டு"என்ஆண்டவரே,என்தேவனே." என்று ஒரே குரலாய் நற்செய்தி முழங்கமிடநம்மையே நற்செய்தியின் நிறைவாகவும், நம் சொல்-செயல்-சிந்தனையை வெளிப்படுத்தும் சிறந்த ஊடகமாகவும் நாம் செயற்படுத்துவோம்.

உங்கள் அனைவருடனும் எமது கிறிஸ்துபிறப்பு நல்வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கின்றோம். "இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து அவர் தம் சிறகுகளால் உங்களை அரவணைப்பார். அவர்தம் இறக்கைகளின் கீழ் நீங்கள் புகலிடம் காண்பீர்கள். அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன் அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன்"என்கிறார்.(தி.பா91).




அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
இணுவில்-மருதனார் மடம், சுன்னாகம்
இசை ஆராதனை
25.12.2018 செவ்வாய்க்கிழமை
மங்கள வாத்தியம் பகல் 11 மணிக்கு
அனுசரணை
திரு புஸ்பநாதன்
துர்க்கா பொத்தக சாலை, சுன்னாகம்

வடக்கு மாகாணத்தில் புகழ் பூத்த ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய பாடநெறிகள் ஆரம்பம்
DIPLOMA IN ENGLISH
(03 மாதங்கள் & 06 மாதங்கள்)
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான பாடநெறி
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு 03 மாத பாடநெறி
IELTS
IELTS LIFE SKILL A1
Diploma in Sinhala
Diploma in computer
ஆரம்பம் : 05.01.2019 காலை 10.30 மணி
(வார இறுதி நாட்களில் நடைபெறும் பாடநெறி)
TVCE (Tertiary and Vocational Education Commission) அங்கீகாரம் பெற்ற ஆங்கில, சிங்கள மற்றும் கணனி பாடநெறிகள், சான்றிதழ்கள்.
(வேலை வாய்ப்புகளின் போது அதிகூடிய அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்)
வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஒரே தெரிவு
E-CITY
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVEVOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
0212217106/0773400418/0770615242/0774924166
web: www.ecitycollege.lk




நியூ உதயா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Thank You
NEW Uthayaa JEWELLERS
021 222 2031
newuthayajwellrs@gmail.com
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jewellers
uthaya.new

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
வாகன விபத்தைத் தவிர்ப்போம்
உயிர்களைக் காப்போம்.
சசிகா
லேணர்ஸ்
DS No - 882
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள
எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
தலைமை காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். Hotline - 077 722 6247
021 221 7678, 077 614 0361
THE SASIKA LEARNERS

புதிய கிளை :
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
தொ.பே. : 021 225 2333 / 071 255 4135

கிளை நிறுவனங்கள் :
மல்லாகம் : K.K.S வீதி , மல்லாகம்.
021 224 3393 / 070 301 3014
வேலணை : வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 221 5472 / 070 301 3012
சங்கானை : ஓடக்கரை வீதி, சங்கானை.
021 225 1664 / 070 301 3016
SasikaLearners
sasikadrivingschool@gmail.com
821 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 8004

## முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நினைவாக 100 ரூபாய் நாணயம் வெளியீடு



(டில்லி)

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் 94 ஆவது பிறந்த தினம் இன்றைய தினம் கொண்டாடப்பட இருப்பதையொட்டி அவரது உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை மோடி வெளியிட்டார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கடந்த ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தனது 93 வயதில் மரணம் அடைந்தார்.

அவரது நினைவை கௌரவிக்கும் வகையில் அவரது உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியிடப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது.

வாஜ்பாயின் 94 ஆவது பிறந்த தினம் இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட இருப்பதையொட்டி அவரது உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழா நேற்று டில்லியில் நடைபெற்றது.

வாஜ்பாய் உருவம் கொண்ட 100 ரூபாய் நாணயத்தை பிரதமர் மோடி வெளியிட்டார். அந்த நாணயம் 35 கிராம் எடை கொண்டது. அதன் ஒரு பக்கத்தில் வாஜ்பாய் உருவமும், அதற்கு கீழ் 1924-2018 என்று பொறிக்கப்பட்டுள்ளது. (4-7)

# இந்தோனேசியாவி
# உயிரிழப்பு 300 ஆ

## 1000 இற்கும் மேற்பட்டே



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியின் கோரத்தாண்டவத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா தீவில் உள்ள அனாக் கிரகடாவ் என்ற எரிமலை நேற்று முன்தினம் இரவு வெடித்து சிதறியது. அதில் இருந்து புகையும், நெருப்புக் குழம்பும் வெளியாகியது. அப்பகுதி முழுவதும் அதிர்ந்து குலுங்கியதால் சுட்டெரிக்கும் வெப்பமும் வெளியேறியது.

பின்னர் சிறிது நேரத்தில் சுந்தா ஜலசந்தி பகுதியில் இருந்து எழுந்த ராட்சத சுனாமி அலைகள் தெற்கு சுமாத்ரா மற்றும் மேற்கு ஜாவா தீவுகளை கடுமையாக தாக்கின. சுமார் 65 அடி உயரத்தில் (20 மீற்றர்) சீறிப்பாய்ந்த சுனாமி அலைகள் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்களை அழித்து தரை மட்டமாக்கின.

வீதிகள், ஹோட்டல்களுக்குள் கடல்நீர் புகுந்ததால் பீதி அடைந்த மக்கள் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.

சுனாமி தாக்குதலில் முதல் கட்டமாக 43 பேர் பலியானதாக தகவல் வெளியானது. சுனாமியின் வேகம் குறைந்து தண்ணீர்

# வாகனங்கள் மோதி விபத்து ஏழு பேர் உயிரிழப்பு

## 50 பேர் படுகாயம்





அரியானா மாநிலத்தில் நேற்று திங்கட்கிழமை 50 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அரியானாமாநிலம்ரோஹ்தக்-ரேவரி நெடுஞ்சாலையில் கடும் பனி மூட்டம் காரணமாகவே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

முன்னால் பயணித்த வாகனங்கள் விபத்தில் சிக்கியதை அறியாமலும், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமலும் பின்னால் பயணித்த 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 7பேர் உயிரிழந்த நிலையில், 50 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். பலரது நிலைமை கவலைக்கிடமான முறையில் இருப்பதால், அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்துக்காரணமாக உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது.


மேலும், குறித்த இடத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. விபத்தில் சிக்கிய வாகனங்களை வெளியேற்றி போக்குவரத்தை சீரமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இதற்காக அங்கு ஏராளமான ஜே.சி.பி வாகனங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன.

வடமாநிலங்களில் வழக்கத்தை விட தற்போது கடும் குளிர் நிலவி வருகின்றது. கடந்த 2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி 3.9 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது. அதனைவிட குறைவாக நேற்று முன்தினம் 3.7 டிகிரி செல்சியஸ் 'வெப்ப நிலை பதிவானது. இந்த வெப்ப நிலையானது 12 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று முன்தினம் குறைவாக பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்தது.

இதேவேளை, பகல் நேரத்திலும் கடுமையான பனி மூட்டம் காணப்படுவதால், விபத்தை தவிர்ப்பதற்காக, வாகனசாரதிகள் முகப்பு விளக்கை எரியவிட்டபடியே பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# மீண்டும் தலைதூக்கும் அல்கொய்தா

## பிரிட்டன் எம்.பி.எச்சரிக்கை





(லண்டன்)

அமெரிக்காவில் இரட்டை கோபுரங்களின் மீது தாக்குதல் நடத்திய அல்கொய்தா பயங்கரவாதிகள் மீண்டும் தலைதூக்கி பிரிட்டன் நாட்டு விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது 11-9-2001 அன்று விமானங்களை மோதவிட்டு அல்கொய்தா பயங்கரவாதி கள் நடத்திய தாக்குதலில் மோதிய நான்கு விமானங்களில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

இதில் 246 பேர் பொது மக்கள். 19 பேர் பயங்கரவாதிகள். உலக வர்த்தக மையக் கட்டடத்தின் இரு கோபுரங்களும் தீப்பற்றி எரிந்தன. தென்கோபுரம் 56 நிமிடங்கள் தீப்பிடித்து எரிந்து பிறகு நொறுங்கி விழுந்தது. வடகோபுரம் 102 நிமிடங்கள் பற்றி எரிந்து நொறுங்கியது.

இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 2,973 பேர் கொல்லப்பட்டனர். இதில் 300 பேர் வெளிநாட்டவர் ஆவர். இதற்கு பழிக்குப்பழியாய் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை பாகிஸ்தானுக்குள் நுழைந்து அமெரிக்க சீல் படையினர் சுட்டுக் கொன்றனர்.

அவரை கொன்ற பின்னர் அல் கொய்தாவின் ஆதிக்கம் அழிந்து விட்டதாக பரவலாக பேசப்பட்டது. எனினும், அந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகளில் சேர்ந்து வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், முன்னர் பலமிழந்தும் உதிரிகளாகவும் இருந்த அல் கொய்தா பயங்கரவாதிகள் மீண்டும் பலம்பெற்று மிகப்பெரிய தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு வருவதாக பிரிட்டன் நாட்டு உள்துறை அமைச்சர் பென் வேல்லஸ் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, பிரிட்டன் நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களை தாக்கி மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்த அவர்கள் ஆயத்தமாகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நவீன ஆயுதங்கள்மூலம் பறக்கும் விமானங்களை சுட்டு வீழ்த்தும் தொழில்நுட்பத்தில் அவர்கள் தற்போது கவனம் செலுத்தி வருகின்றனர். புதிய யுக்திகள் மற்றும் முறைகளை பயன்படுத்தி ஐரோப்பிய கண்டத்தில் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தும் தயாரிப்பில் அல் கொய்தா பயங்கரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிநவீன இரசாயனங்கள் மூலம் நடத்தப்படவுள்ள இந்த தாக்குதல்களில் இருந்து விமானங்கள் பாதிக்கப்படாமல் இருப்பது தொடர்பாக ஆராய்ச்சி செய்து தடுப்பு நடவடிக்கைகளை அடையாளம் காணப்பதற்காக பிரிட்டன் அரசு இதுவரை இரண்டரை கோடி பவுண்டுகளை செலவிட்டுள்ளது எனவும் அந்த பேட்டியில் பென் வேல்லஸ் தெரிவித்துள்ளார். (4-7)

# சுரங்

## 10



(மொஸ்கோ)

ரஷ்யாவின் உ
உள்ள பொட்டாச்
சுரங்கத்தில் ஏற்பட்
பேர் உயிரிழந்தன

நேற்று முன்தி
கிழமை இந்த சம்
றதை அடுத்து அங்
வடிக்கைகள் முன்
வருகின்றன.

மொஸ்கோவுக்
சுமார் 1500 கிலே
மைல்கள்) தொல
சொலிகாமஸ்க் சுர
தீவிபத்து மற்றும்
ணமாக இந்த சு

# வெளிநாடு

## வில் சுனாமி
## ஆக உயர்வு
## ட்டோர் படுகாயம்



னெ. சுமார்
றிப்பாய்ந்த
ணக்கான
ர மட்டமா

கடல்நீர்
ங்கிருந்து
ில் தஞ்சம்

டமாக 43
ரியானது.
தண்ணீர்

வடியத் தொடங்கியதும் மீட்பு பணியை தொடங்கியபோது ஏராளமான உடல்கள் மீட்கப்பட்டன.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்று மாலை நிலவரப்படி சுனாமியால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 222 என்ற நிலையில் இருந்தது.

நேற்றுக் காலை உயிரிழப்பு 281 ஆக உயர்ந்துள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் அபாயம் உள்ளது.

பேரிடர் மேலாண்மை மீட்புக் குழுவினர் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (4-7)

## சுரங்கமொன்றில் தீ!
## 0 பேர் உயிரிழப்பு




மொஸ்கோ)
ஷ்யாவின் உரல்கலி பகுதியில்
ள பொட்டாசியம் தயாரிப்பு
கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 10
உயிரிழந்தனர்.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்
மை இந்த சம்பவம் இடம்பெற்
அடுத்து அங்கு தேடுதல் நட
கைகள் முன்னெடுக்கப்பட்டு
கின்றன.
மாஸ்கோவுக்கு வடகிழக்காக
ர் 1500 கிலோமீற்றர் (930
ல்கள்) தொலைவில் உள்ள
கொமஸ்க் சுரங்கத்தில் ஏற்பட்ட
த்து மற்றும் அதிகபுகை கார
ாக இந்த மரணங்கள் சம்ப

வித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த சுரங்கத்தின் ஒரு பகுதியில் ஏற்பட்ட தீபரவல்காரணமான பணியாளர்கள் அதில் சிக்குண்டதுடன், அதன் ஒருபகுதியின் தீ இன்னமும் முழுமையாக கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 360 மீற்றர் ஆழத்தில் இருந்து உயிரிழந்த பணியாளர்களை மீட்கும் பணிகளில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-7)

## இந்தோனேஷியாவுக்கு மீண்டும் சுனாமி எச்சரிக்கை



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் அனக் கிரகட்டு எரிமலை தொடர்ந்தும் புகையை கக்கி வருகின்றது. இதனால், மீண்டும் சுனாமி அலைகள் மேலெழலாம் என்று அஞ்சப்படுவதோடு, மக்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கரையோர பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்துள்ளனர்.

அனக் கிரகட்டு எரி மலை வெடித்ததன் காரணமாகவே சுனாமி அலை மேலெழுந்ததாக நம்பப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட குறித்த அனர்த்தத்தில் சிக்கி, நேற்று திங்கட்கிழமை வரை 281 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலர் காணாமல் போயுள்ளதோடு, 1000இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.


இந்நிலையில், நேற்று முன்தினம் முதல் அனக் எரிமலை மீண்டும் புகையை கக்கி வருகின்றது. அதிலிருந்து பரவும் சாம்பல் வானுயர பரவி வருகின்றது. அது தொடர்பான காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

அனக் எரிமலையானது கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக எரிமலை குழம்புகளையும் புகையையும் கக்கி வந்தது. தற்போது அது சீற்றமடைந்துள்ளதால், மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைப்பதில் அதிகாரிகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக குடியிருப்புகளில் தங்கவைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (4-7)

## நைஜீரியாவில் ஊருக்குள் புகுந்து
## 17 பேரை சுட்டுக்கொன்ற மர்மக்கும்பல்






(அபுஜா)


நைஜீரியாவின் ஜம்பாரா மாவட்டத்தில் துப்பாக்கிகளுடன் திடீரென ஊருக்குள் புகுந்த ஒரு கும்பல், அங்குள்ள 17 பேரை சுட்டுக் கொன்றனர். நைஜீரியாவில் கும்பல்களுக்கிடையே நடக்கும் மோதல்கள் தீவிரமடைந்துள்ளன. குறிப்பாக ஜம்பாரா, கதுனா மாநிலங்களில்துப்பாக்கிகளுடன் வந்து தாக்குதல் நடத்துவது கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது. ஜம்பாராவில் மட்டும் இந்த ஆண்டு நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அங்கு அதிக அளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

இந்நிலையில், ஜம்பாரா மாநிலம் பாரு மாவட்டம் மகாமி கிராமத்தில் கடந்த சனிக்கிழமை திடீரென நுழைந்த மர்ம நபர்கள், அங்குள்ள மக்களை கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில், 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் மேற்கொண்டு தாக்குதல் நடப்பதை தடுக்கும் வகையில், கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் சிலரது இறுதிச்சடங்கில் மாநில பொறுப்பு ஆளுநர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பங்கேற்றனர். (7-4)

## சிறுபான்மையினரை நடத்தும் விதம் குறித்து
## நாம் இந்தியாவுக்கு பாடம் நடத்துவோம்

### பாக்.பிரதமர் இம்ரான் தெரிவிப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வசிக்கும் சிறுபான்மை மக்களை மதித்து அவர்களுக்கான நலன்களில் எவ்வாறு ஈடுபாடு காட்டுவது என்பது தொடர்பாக இந்தியாவுக்கு தாம் எடுத்துக்காட்டாக செயற்படப் போவதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அங்கு வசிக்கும் சிறுபான்மை மக்களின் நலனில் மாநிலத்தை சேர்ந்த அமைச்சர்கள் கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிட்ட இம்ரான் கான், அண்மையில் இந்தி நடிகர் நசீருதீன் ஷா வெளியிட்ட ஒரு கருத்தை சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் பசுகாவலர்கள் என்ற பெயரால் நடைபெறும் வன்முறைகள் மற்றும் சகிப்புத் தன்மையற்ற நிலை தொடர்பாக அண்மையில் செவ்வி ஒன்றில் கருத்து தெரிவித்திருந்த நசீருதீன் ஷா, இன்றைய இந்தியாவில் எனது பிள்ளைகளின் நிலைமை எதிர்காலத்தில் எப்படி ஆகுமோ? என்று நான் கவலைப் படுகிறேன் என குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்த கருத்தை தனது உரையின் போது சுட்டிக்காட்டிய இம்ரான் கான், இதே கருத்தைதான் பாகிஸ்தான் பிரிவினையின் போது நமது தேசப்பிதா முகமது அலி ஜின்னா கூறியிருந்தார் என தெரிவித்தார்.

இந்தியாவில் முஸ்லிம்கள் சம உரிமை கொண்ட மக்களாக் நடத்தப்பட மாட்டார்கள் என்று முகமது அலி ஜின்னா அப்போது வெளியிட்ட அச்சம் தற்போது அங்கு நடந்து வருகிறது. இதைதான் நசீருதீன் ஷா தற்போது உறுதிப்படுத்தியுள்ளார். இங்குள்ள சிறுபான்மையினத்தவர்களை சம உரிமை பெற்ற மக்களாக மாற்ற அமைச்சர்களும், அரசியல் தரப்பினரும் உழைக்க வேண்டும்.

இதன்மூலம் இந்தியாவில் சிறுபான்மையினத்தவர்களை எப்படி நடத்த வேண்டும்? என்பதை நாம் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு காட்ட வேண்டும் என்று இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக பதிலளித்துள்ள நடிகர் நசீருதீன் ஷா, எங்கள் நாட்டில் 70 ஆண்டுகளாகவே ஜனநாயகம் நடைமுறையில் உள்ளது.

எங்களை கவனித்துக் கொள்ள எங்களுக்கு தெரியும். தனக்கு தொடர்பில்லாத விவகாரங்களில் தலையிடுவதற்கு பதிலாக தங்கள் உள்நாட்டு பிரச்சினைகளை இம்ரான் கான் கவனிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (4-7)

# பொதுஜன பெரமுனவில் இணையவில்லை நான் சு.கவின் ஆயுள்கால உறுப்பினர்

## மகிந்த ராஜபக்ஷ புதுவிளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமையை தான் பெற்றுக் கொள்ளவில்லை என்று, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமை அட்டையை ஏற்றுக்கொண்டதாக, வெளியாகிய படம், தொடர்பான கேள்விக்குப் பதிலளித்துள்ள மகிந்த ராஜபக்ஷ,

"அது உறுப்பினர் அட்டையைப் பெற்றுக் கொள்வது தொடர்பானது அல்ல. பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ளும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த போது எடுக்கப்பட்டது.

அந்த அட்டையில் எனது பெயர் அச்சிடப்படவில்லை என்பதால், நான் வைத்திருக்கும் ஆவணம் உறுப்பினர் அட்டை அல்ல.



உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தல் மற்றும் உறுப்புரிமை வழங்குதல் என்பன இருவேறு விடயங்களாகும்.

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆயுள்கால உறுப்பினர். கட்சியின் மூத்த ஆலோசகராக இருக்கிறேன். மூத்த ஆலோசகர்கள் பக்கம் மாறமாட்டார்கள். அவர்களுக்கு ஓய்வு இல்லை" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# கடற்படையின் உளவாளிகள் நீதிமன்றத்திற்குள் வந்தது ஏன்?

(கொழும்பு)

கடற்படையைச் சேர்ந்த இரு உளவாளிகளை பொலிஸார் கொழும்பு நீதிமன்றத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

ஆங்கில ஊடகமொன்று இதனைத் தெரிவித்துள்ளது.

11 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள அதிகாரிக்கு உயிராபத்து உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள சூழ்நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனக, டொனி என்ற இரு உளவாளிகள் நீதிமன்றத்தில் அமர்ந்திருப்பதைப் பொலிஸார் அவதானித்துள்ளனர்.

இதன்பின்னர் அவர்களை விசாரணை செய்யுமாறு பொலிஸார் நீதவானைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரையும் கைதுசெய்த பொலிஸார் நீதிமன்ற வளாகத்திற்குள் உள்ள பொலிஸ் அலுவலகத்திற்குள் வைத்து விசாரணை செய்துள்ளனர்.

வெலிசர கடற்படை முகாமில் பணிபுரியும் இரு கடற்படையினரும் நீதிமன்றத்திற்கு எதற்காக வந்தனர் என்பது குறித்து பொலிஸார்



விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டது உட்பட முக்கிய சம்பவங்கள் குறித்து விசாரணை செய்துவரும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரி நிசாந்த சில்வாவும் கடற்படையைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்தில் காணப்படுவது குறித்து நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சம்பள உயர்வுக்காக தேவையேற்படின் அமைச்சுப் பதவியையும் துறக்கத் தயார்

## திகாம்பரம் திட்டவட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொள்ள கூட்டு ஒப்பந்த கைச்சாத்திலிருந்து இ.தொ.கா. உள்ளிட்ட பெருந்தோட்ட கூட்டு கமிட்டி மற்றும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் ஆகியன வெளியேறி ஒரே மேசையில் அமர்ந்து அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் நாங்களும் கைகோர்த்து முதலாளிமார் சம்மேளனத்திற்கும் அரசுக்கும் அழுத்தம் கொடுத்து நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்த் தெரிவித்த மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம், தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் தேவையேற்படின் தற்போது பெற்றுள்ள அமைச்சுப் பதவியையும் துறக்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் பதவி வகித்த அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட அவருக்கு அவரின் ஆதரவாளர்களால் ஹற்றன் நகரில் ஆலய வழிபாடும் பிரமாண்டமான வரவேற்பு பேரணியும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் மேலும் கருத்து தெரிவித்த அவர்., நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்புக்கு விரோதமாகச் செயற்பட்டு புதிய அரசொன்றை உருவாக்கினார். ஆனால் அனைத்துக் கட்சிகளும் நீதிமன்றத்தை நாடியதால் எமக்கு நீதி கிடைத்தது. அதனால் மீண்டும் எமது ஐ.தே.க அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இந்த இடைக்காலத்தில் இரண்டு மாத காலம் பிரதமராகவும் அமைச்சர்களாகவும் செயற்பட்டவர்கள் ஆடிய



ஆட்டத்தை மக்கள் அறிவார்கள்.

நியாயம் எப்பக்கம் இருக்கின்றதோ அங்கு திகா, மனோ, திலகர் ஆகியோர் உறுதியாக நின்றோம். இன்று விட்டுச் சென்ற அமைச்சும் அந்தஸ்தும் மீண்டும் கிடைத்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் நாம் செய்த அபிவிருத்திகள் யாவும் தடைப்பட்டுள்ளது. அதனை மிக வேகமாக அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.

இதுவரை வீடுகள் அமைத்து வந்தோம். இப்போது மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்ய திகா, திலகர், உதயா ஆகியோர்தயாராக உள்ளோம் என்றார்.

அதேவேளையில் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் ஹற்றன் நகரசபைக்குப் போட்டியிட்ட எமக்கு மக்கள் ஆதரவு பலமாக அமைந்தது. அதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் ஹற்றன் நகர அபிவிருத்தியில் இங்ரு பிரதான வீதிகள் காப்பெற் முறையில் செப்பனிடப்படும் எனவும் உறுதியளித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞானம்

ஒரு பெரிய சந்தை. பல பேர் வந்து போகும் ஓர் இடம். அங்கே ஒருத்தன் பிச்சை எடுத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தான். ரொம்பக் காலமாக அவன் அந்த ஒரே இடத்தில் நின்றுகொண்டே பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான்.

ஆனாலும் அவன் வாயைத் திறந்து பிச்சை போடுங்கள் என்று யாரையுமே கேட்பதில்லை! தினமும் காலையில் வருவான். அந்த இடத்தில் நிற்பான் வலது கையை மட்டும் முன்னால் நீட்டி ஏந்திக் கொண்டிருப்பான். வாயைத்திறந்து எதுவும் பேசுவதில்லை. அந்த வழியாக வருபவர்கள் போகிறவர்கள் அவன் கையில் ஏதாவது காசு போட்டு விட்டுப் போய்க்கொண்டே இருப்பார்கள்.

அந்த ஒரே இடத்தில் நின்று ஒரு ஐம்பது வருடமாக அவன் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். திடீர் என்று ஒரு நாள் அவன் செத்துப் போய் விட்டான். செத்துப்போய் அந்த இடத்திலேயே விழுந்து விட்டான். ஊர் ஜனங்கள் எல்லாம் பார்த்தார்கள்!

ஐயோ பாவம்! இப்படி அநாதையாக விழுந்து செத்துப் போய் விட்டானே என்று பரிதாபப்பட்டார்கள்! அந்த ஊர் மக்களுக்கு அவன் பேரில் ரொம்ப அனுதாபம்!

இவன் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தால் கூட இவன் ஒரு வித்தியாசமான ஆள். யாரையும் தொந்தரவு செய்வது இல்லை. மக்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரு தீர்மானம் செய்தார்கள். இந்தப் பிச்சைக்காரனுக்கு இதே இடத்தில் ஒரு சிலை வைக்க வேண்டும் என்று!

உடனே நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பல பேர் முன் வந்து தாராளமாக நிதி கொடுத்தார்கள். நிறையப் பணம் சேர்ந்து விட்டது. அந்த ஆள் நின்றுகொண்டிருந்த இடத்திலேயே அத்திபாரம் தோண்ட ஆரம்பித்தார்கள். ஒரு இரண்டு அடி ஆழம் தோண்டியிருப்பார்கள். திடீர் என்று ஒரு வித்தியாசமான சத்தம். டங் டங் என்று கேட்டது.

அவசரம் அவசரமாகத் தோண்டிப் பார்த்தார்கள்! ஒரு செப்புக்குடம் தெரிந்தது. எடுத்து அதில் என்ன இருக்கிறது என்று பார்த்தார்கள். ஏராளமாகத் தங்க நாணயம், வெள்ளிக் காசு எல்லாம் இருந்தது. அதைப் பார்த்ததும் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு ரொம்ப ஆச்சரியம்.

ஒருத்தர் சொன்னார், "பார்த்தீர்களா? இந்தப் பிச்சைக்காரன் தன்னுடைய காலுக்கு அடியிலேயே புதையல் இருப்பது தெரியாமல் போறவர்கள் வருகிறவர்களிடம் எல்லாம் "காசு" கேட்டுக் கையேந்தி நின்றுகொண்டிருந்தே செத்து விட்டான்" என்றார்.

அப்போது அந்த வழியாக ஒரு துறவி வந்தார். கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார், "ஆமாம்! ஒவ்வொரு மனிதனுமே இப்படித்தான் செய்துகொண்டிருக்கிறான்! தன்னுடைய மனதில் குவிந்திருக்கும் திறமையையும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தெய்வத்தையும் அவன் புரிந்து கொள்வது இல்லை! அது வெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்துக்கொண்டு அதை தேடிக்கொண்டே காலம் முழுவதும் கழித்துவிடுகிறார்கள்!" என்று சொல்லி விட்டு அந்தத் துறவி போய் விட்டார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் அதற்குப்பின்னர் சிந்திக்க ஆரம்பித்தார்களாம். இந்தக் கதை எதற்காக என்றால்... எங்களிடம் என்னென்ன இருக்கிறது என்பதை நாம் சரியாகத் தெரிந்து கொள்வது இல்லை... ஆனால் அதையெல்லாம் தேடி வெளியே அலைந்துகொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான்.

அந்தத் தெருக்கோடியில் இருக்கும் பெட்டிக் கடைக்குப் போய் ஒரு அரைக் கிலோ சந்தோசத்தை வாங்கிக் கொண்டு வா என்றா சொல்ல முடியும். ஜீனாய்ட் என்று ஒரு ஞானி இருந்தார். ஒரு சீடன் அவரிடம் வந்தான்.

"உங்களிடம் ஞானம் என்னும் முத்து இருப்பதாகச் சொல்கிறார்களே! எனக்கு அதில் கொஞ்சம் தேவை. ஒன்று அதை என்னிடம் விற்று விடுங்கள்... இல்லை என்றால் இனாமாகக் கொடுங்கள்!" என்று கேட்டான். அதற்கு அந்த ஞானி,


"உனக்கு அதை நான் விற்பதற்கு இல்லை! ஏன் என்றால் அதனுடைய விலையை உன்னால் கொடுக்க முடியாது. சரி இனாமாகக் கொடுக்கலாம் என்றால்... இனாமாகக் கொடுப்பதை நீ மதிக்கமாட்டாய்! அதனால் என்னை மாதிரி நீயும் கடவுள் என்னும் சமுத்திரத்தில் மூழ்கி எழுந்துகொள்! நீயும் ஒரு முத்து எடுத்துக்கொண்டு வரலாம்!" என்றார்.

இது எல்லாம் வெளியில் வாங்கும் சமாச்சாரம் இல்லை. முயற்சி வேண்டும்! ஒரு ஆசாமி பத்தாயிரம் ரூபா லோட்டரி சீட்டில் பரிசு விழுந்ததாக இரவு கனவு கண்டார். விடிந்து எழுந்ததும் அழுது கொண்டே உக்கார்ந்திருந்தார். ஏன்? கண்டது கனவாகப் போய்விட்டது என்பதற்காகவா? அதற்கு இல்லை! ஏன் ஐயா அழுகிறீர்கள் என்று கேட்டால்,

கனவில் விழுந்தது ஒரு இலட்சமாக இல்லாமல் போய்விட்டதே! அதை நினைத்தால் தான் எனக்கு ஆத்திரம் வருகிறது!" என்று சொல்லி விட்டு மறுபடியும் "ஓ!" என்று அழ ஆரம்பித்து விட்டார்.

# ‘ஒற்றுமையும் சமாதானமும் நாட்டில் நிலவ வேண்டும்’

## நீதியரசர் விக்னேஸ்வரன் நத்தார் தின வாழ்த்து



இறை தூதரின் பிறப்பைக்கொண்டாடும் இன்றைய நத்தார் தினத்தில் அனைவருக்கும் எமது நத்தார் தினவாழ்த்துக்கள் உரித்தாகுக!

கிறிஸ்தவமதத்தின் தனிப் பெருஞ் சிறப்புஅதன் சேவை மனப்பான்மையாகும்.

தன்னை மறந்து பிறரை நேசித்தவர் இயேசு கிறிஸ்து நாதர். சிலுவையில் அவர் அறைபட்டிருந்த போது "இறைவனே! அவர்களை மன்னிப்பாயாக! தாம் செய்தது தவறு என்பதை அறியாதவர்கள் அவர்கள்" என்று இறைவனிடம் மன்றாடினார். தன்னைமறந்துதன் இடர்களின் மத்தியிலும் மற்றவர்களை நேசித்தவர் இயேசு கிறிஸ்துநாதர்.


இன்று இந்தநாட்டில் ஒற்றுமையும் சமாதானமும் நிலவவேண்டுமென்றால் கிறிஸ்தவ அடையாளங்களான அன்பும் சேவை மனப்பான்மையும் யாவரையும் ஆட்கொண்டிருத்தல் வேண்டும். அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இறைவன் இந் நாட்டுமக்கள் அனைவருக்கும் நல்குவானாக!

யாவர்க்கும் எமது இனிய நத்தார் தினவாழ்த்துக்கள்!

நீதியரசர்
சி.வி.விக்னேஸ்வரன்,
முன்னாள்
முதலமைச்சர்
வடமாகாணம்.

# நிரந்தர சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையுங்கள்

## நத்தார் தின வாழ்த்தில் இரா.சம்பந்தன் அழைப்பு



நத்தார் பண்டிகையை கொண்டாடும் அனைவருக்கும் எனது மனம் கனிந்த வாழ்த்துக்கள். மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்திய இயேசு கிறிஸ்துவின் பிறப்பினை நினைவுகூரும் இந்தநாளில், இந்தநாட்டு மக்கள் உண்மையான நம்பிக்கையையும் மகிழ்ச்சியினையும் அடையவேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன்.

இந்த பண்டிகை நாளை கொண்டாடும் நாம் இயேசு நாதர் இந்த உலக வாழ்வில் வாழ்ந்தும் போதித்தும் வந்த அன்பு, நீதி மற்றும் பிறரை நேசித்தல் போன்ற படிப்பினைகளை மறவாதிருப்போமாக.

மேலும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளில் வாழ்வோர், ஒடுக்கப்பட்டோர், இல்லாமையிலுள்ளோர் போன்றவருடன் எம்மை அடையாளப்படுத்திக் கொள்வதன் மூலம் நத்தார் பண்டிகையின் உண்மையான தார்ப்பரியங்களை கடைப்பிடிப்போமாக. நீதி மற்றும் சமத்துவம் அடிப்படையில் இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப முன்வருமாறு இந்நாட்டின் தலைவர்களை நான் அழைத்து நிற்கிறேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (இ-7)

# மன்னார் ஆயரின் வாழ்த்துச்செய்தி



இயேசுபிரானின் பிறப்பு விழாவானது கிறிஸ்மஸ் விழா என்ற பெயரில் உலகமெங்கும் மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடப்பட்டு வருகிறது. கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படைச் செய்தியே கடவுள் மனிதன் ஆனார் என்பதாகும்.

இதனையே திருவிவிலியத்தில் "வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடி கொண்டார்" (யோவான் 1:14) என்று யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

கடவுள் என்றால் அனைத்தையும் கடந்தவர். கால, தேச வர்த்தமானங்களைக் கடந்தவர். அப்படியாக அனைத்தையும் கடந்தவர் இன்று காலத்திற்கு, இடத்திற்கு தன்னைக் கட்டுப்படுத்தியவராக மனிதகுலவரலாற்றில்தன்னை இணைத்துக் கொள்கிறார். ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட இனத்தில், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட பெற்றோருக்கு மகனாக, நாம் தொட்டுணரக் கூடிய ஒரு மனிதக் குழந்தையாகப் பிறக்கின்றார்.

இஃதத்தான் கிறிஸ்துவின் மனுவுடலேற்பு என்று கிறிஸ்தவ இறையியல் குறிப்பிடுகின்றது.

கிறிஸ்துவின் இந்த மனுவுடலேற்பு என்பது கடவுள் மனுக்குலத்தின்மேல்கொண்ட அளவற்ற அன்பின் அடையாளமாக இருக்கின்றது.

ஆகவே கிறிஸ்மஸ் விழா என்பது கடவுளின் அன்புக்கு நாம் எடுக்கும் விழா ஆகும். கடவுள் மனிதனானது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகின்ற நற்செய்தியாகும்.

இதை நாம் கொண்டாட வேண்டும். ஆனால் இந்தக் கொண்டாட்டம் வெளியரங்கமானதாக மட்டும் நின்றுவிடாமல் உள்ளார்ந்ததாகவும் அமைய வேண்டும்.

கிறிஸ்து தன்னுடைய பிறப்பின் ஊடாகக் கொண்டு வந்த விடுதலையை, இரட்சிப்பை, மீட்பை அனுபவிக்கின்ற மகிழ்வை நாம் பெற வேண்டும்.

அதுதான் உண்மையான மகிழ்ச்சி. ஆகவே இந்த மகிழ்வின் விழா நமது பாவங்கள், சாபங்களில் இருந்து நமக்கு விடுதலையைத் தருவதாக, இரட்சிப்பின், மீட்பின் அனுபவத்தை நம்மில் ஏற்படுத்துவதாக! உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் ஒவ்வொருவரையும் உங்கள் குடும்பத்தையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ,
ஆண்டகை மன்னார் ஆயர்.

# இயேசு பிரானின் போதனைகள் நாடெங்கிலும் எதிரொலிக்கட்டும்

## ஜனாதிபதி நத்தார் தின வாழ்த்து



சமாதானம், சகவாழ்வு ஆகிய நற்குணங்களின் மகிமையை போற்றும் இயேசு பிரானின் செய்தியினை மீள் ஒலிக்கச் செய்யும் மகிழ்ச்சிகரமான பொழுதிலேயே நத்தார் உதயமாகின்றது. அந்தவகையில் மனித இனத்தினை இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி கொண்டு செல்வதற்காக இவ்வுலகில் அவதரித்த இயேசு பிரானின் பிறப்பினைக் கொண்டாடும் உலகவாழ் கிறிஸ்தவ மக்கள் புத்தம்புது எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகளுடனேயே நத்தார் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

கிழக்கு வானில் தோன்றி ஞானிகளுக்கு வழிகாட்டிய நட்சத்திரம் அவர்களுக்கு முன்சென்று பாலகன் இயேசு பிறந்த மாட்டுத் தொழுவத்திற்கு மேல் உதித்த அந்த இரவானது, அளவற்ற அன்பின் செய்தியையே சுமந்து வருகின்றது.

இயேசு நாதர் தம் வாழ்நாள் முழுவதிலும் பாசமும் நேசமுமிக்க வார்த்தைகளையே உபயோகித்தார். மீனவர்கள், தச்சர்கள், கமக்காரர்கள் போன்ற சாதாரண பாமர மக்களுடனேயே அவர் உரையாடி வந்தார். "கண்ணுக்கு கண் பழி வாங்குதல் என்றும் கல்லால் தாக்கப்படின் மலையைக் கொண்டு திருப்பித் தாக்கி நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றுமே இதுவரை உங்களுக்கு போதிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆயினும் எதிரியின் மீதும் அன்பைச் செலுத்துங்கள். உம்மை வெறுப்போர் மீதும் இம்சிப்போர் மீதும் நீ பாசத்தை செலுத்து" என்பதே அவரது போதனைகளாகும்.

நத்தார் என்பது இத்தகைய உயரிய நோக்கத்தைக் கொண்ட உன்னத மானவரின் அளவற்ற நற்குணங்களை மீண்டும் மீண்டும் நினைவுகூரும் காலமாகவே அமைகின்றது. ஆகையால் இயேசு கிறிஸ்துவின் அக்கொள்கையினை நிலைநாட்ட திடசங்கற்பம் கொள்ள வேண்டியது எம்மவரின் கடமையாகும் அறிவை நோக்கி அகன்ற வாயில் வழியே செல்லத் துடிப்பவர்களுக்கு நத்தார் பண்டிகையானது, புதியதோர் வாழ்க்கையை நோக்கி பயணிப்பதற்கான வழியாகவே அமைகின்றது. சக மனிதர்களை ஏமாற்றி தீய எண்ணங்களோடு வாழும் மனிதர்கள் அவற்றை விடுத்து நற்குணமுடையவர்களாக மாறாது விடின், அவர்களால் ஒரு போதும் சுவர்க்க வாயிலை அடைய முடியாது என்றே இயேசு நாதர் போதித்துள்ளார்.

அமைதி, கருணை, மனித நேயம் போன்ற இவ்வுலக வாழ்க்கையின் உயர்விற்கான பண்புகளைப் போதிக்கும் இயேசு பிரானின் போதனைகளும் மனிதாபிமானம், சகவாழ்வு, தியாகம் பற்றிய அவரது நற்செய்திகளும் இந்த நத்தார் காலத்தில் நாடெங்கிலும் எதிரொலிக்கட்டும்!

இலங்கைவாழ் கிறிஸ்தவ மக்களுக்கும் உலகெங்கிலும் பரந்துவாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் எனது மகிழ்ச்சிகரமான இனிய நத்தார் வாழ்த்துக்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

# நித்திய வெளிச்சத்தில் தேசம் விடியட்டும்

## நத்தார் தின வாழ்த்தில் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

உலகத்தின் ஒளியாக கருணை மைந்தன் இயேசு பாலன் பிறப்பெடுத்து வந்த நத்தார் தினத்தின் வருகை நித்திய வெளிச்சத்தை தேசமெங்கும் பரப்பட்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்தச் செய்தியில் இது எமக்கென்று வாக்களிக்கப்பட்ட பூமி. அதன் உரிமையை வெல்லும் திசை நோக்கி மக்களை வழிநடத்திச் செல்லவே நாம் இந்தப் பூமிக்கு வரவழைக்கப்பட்டவர்கள். எமது நிலங்கள் எமது மக்களுக்கே சொந்தம்.

எமது மக்களின் மனங்களில் நித்திய மகிழ்ச்சியும் எமது வரலாற்று வாழ்விடங்கள் தோறும் நிரந்தர சமாதானமும் நீடித்து நிலவ வேண்டும்.

எமது மக்களின் நியாயமான உணர்வுகளுக்காக நாம் என்றும் பரிசுத்தமாகவே உழைத்து வருகின்றோம்.

ஆகவேதான், துயரச்சிலுவைகளை எமது மக்கள் சுமந்து நடந்த இரத்தப்பலிகளுக்கு மத்தியிலும் எமது மக்களுடனேயே நாமும் இடையறாது வாழ்ந்து வந்திருக்கிறோம்.

முட்களிலும் கற்பாறைகளிலும் நடந்து வந்து வதைபட்ட எமது மக்களின் பாதங்களின் வலிகள் தடவி, பசுந்தரையின் பாதை நோக்கி அவர்களை அழைத்துவர நாம் அயராது உழைத்து வந்திருக்கிறோம்.

எமது மக்களை நேசித்து நாம் கட்டியெழுப்ப நினைக்கும் சமத்துவ சாம்ராச்சிய கனவுகளுக்காக, நாம் கொண்டிருக்கும் கருத்துக்களும் கொள்கைகளும் அதற்கான யதார்த்த பூர்வமான நடைமுறைகளும், எமது தீர்க்கதரிசனங்களும் மழை நீரால் அரித்துச் செல்லப்படும் மணல் மீது இடப்பட்ட அத்திபாரங்கள் அல்ல.

மாறாக எந்தக் காட்டாற்று வெள்ளத்தாலும் அசைக்க முடியாத கல்மலை மீதே எமது கொள்கைகளின் அத்திபாரங்களை நாம் கட்டியெழுப்பியிருக்கின்றோம்.

புறாக்களைப்போல் கபடமில்லாமலும், சர்ப்பத்தைப் போல் கேள்வியுள்ளவர்களாவும் எமது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். அப்போதுதான் இனிவரும் காலம் நல்ல கனிதரும் காலம் என்ற நம்பிக்கைகளை வெல்ல முடியும். நாம் சொல்லும் கருத்துக்கள் சத்திய வாக்குகள் போன்றவை.

வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்நாம் கொண்டிருக்கும் கருத்துக்களும் எமது வழிமுறைகளும் ஒரு போதும் தோற்காது.

எமது தீர்க்கதரிசனங்களும் நம்பிக்கை தரும் சாத்தியமான எமது வழிமுறைகளுமே இன்று எல்லோராலும் ஏற்கப்பட்டு வெல்லப்பட்டும் வருகின்றன.

நிரந்தர சமாதானம், நீடித்த சமவுரிமை, வரலாறெங்கும் துயரச்சுமைகளைச் சுமந்த எமது மக்களுக்கு ஒரு நியாயத்தீர்ப்பு, பஞ்சம், பசி, பட்டினி இல்லாத, சொந்த நிலங்களை இழந்து வாழும் துயர்கள் இல்லாத, எவரையும் எவரும் அடிமைகள் என்று கொள்ளாத யாரும் சிறைகளில் வாடும் கொடுமைகள் இல்லாத, அபிவிருத்தி இல்லையென்ற அழுகுரல்கள் கேட்காத புதியதொரு சமாதான இராச்சியத்தையே நாம் விரும்புகின்றோம்.

இவைகளே எமது மக்களின் ஆழ்மன விருப்பங்களும் ஆகும். ஆனாலும் எமது மக்களின் விருப்பங்கள் யாவும் வெறும் கற்பாறைகளில் மட்டும் விதைக்கப்பட்ட விதைகளாகவே இருந்து வந்திருக்கின்றன.

நிரந்தர சமாதானத்தை நோக்கிய எமது மக்களின் விருப்பங்கள் யாவும் சாத்தான்களின் தடைகளால் நிறைவேறாத கனவுகளாகவே இன்று வரை முடங்கிப்போயிருக்கின்றன.

எமது நிலத்தில், இனி எமக்கு மக்கள் வழங்கும் ஆணையின் பலத்தில் ஒளி பிறந்த தேசமாக எமது சொந்த பூமியை மாற்றிட உறுதி கொண்டு எழுவோம்.

இவ்வாறு தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பிறந்திருக்கும் நத்தார் தினத்தை நம்பிக்கையோடு கொண்டாடி மகிழ்வோம் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை பணயம் வைத்து அரசியல் நடத்தாதீர்கள்

## கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் யாழ்.ஆயர் வலியுறுத்து

2018ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா உலகம் முழுவதிலும் இன, மத, நிற, மொழி வேறுபாடின்றி கொண்டாடப்படும் வேளை பாலக இயேசுவின் அன்பும் அருளும் ஆசீரும் இவ்விழாவை கொண்டாடும் அனைவரோடும் என்றும் இருப்பதாக என இறை ஆசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

இந்த பெருவிழாவின் போது உலகம் முழுவதிலும் பல்வேறு மொழிகளிலும் பாடப்படும் ஒரே இறைவார்த்தை உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்பதாகும். (லூக்காஸ் 2:13-14)

இந்த பெருவிழாக் காலத்தில் அவருக்கு உகந்தவர்களாகி எல்லோருக்கும் அமைதி உண்டாக்கும் கருவிகளாகவே நாம் அழைக்கப்படுகிறோம்.


கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதிமுதல்இலங்கை நாட்டை அச்சுறுத்திய ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி என அழைக்கப்படும் அரசியல் முறுகல் நிலை ஓரளவு சுமுகமாக தீர்ந்துள்ளமை மனதிற்கு நிம்மதி தருகிறது. ஜனநாயகம்வென்றுள்ளது என வரவேற்போம்.

இது ஒரு தேசிய பிரச்சினை என்கின்ற வகையில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையும் யாழ்.மறைமாவட்ட ஆயர் என்கின்ற வகையில் நாமும் இப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட வேண்டுமென இறைவரம் வேண்டுமாறு இறை மக்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். யாழ்.மறைமாவட்டத்தின்பல பங்குகளில் வேண்டுதல் செய்தனர். எதிர்பார்த்த பயந்த பயங்கர முடிவுகளும் இன்றி பிரச்சினைமுடிவுக்கு வந்துள்ளது. இறைவனுக்கு நன்றி. இறைவரம் வேண்டிய அனைவருக்கும் அன்பான நன்றிகள்.

தேசிய ஜனநாயக முன்னனி உதயமாகி நிறைவேற்று அதிகாரத்திற்கு முடிவு கட்டவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது வரவேற்கப்பட வேண்டியதே. இலங்கை நாட்டின் எல்லா பிரஜைகளுக்கும் நீதியான, சமத்துவமான, அமைதியான வாழ்வு கிடைக்க அனைத்து அரசியல்வாதிகளும் உழைக்க வேண்டும்.தனிப்பட்ட அதிகாரம், பதவி, பட்டம் என்பன எல்லாம் இங்கு முக்கியமல்ல.

ஒக்டோபர் 26 அரசியல் சூழ்ச்சி - இது ஒரு முடிவல்ல மாறாக இது ஒரு ஆரம்பமே. எதிர்பார்த்து நம்பியிருந்த அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படாமலே போய்விட்டது. நல்லெண்ண அரசு நீதியாக செயற்படும் என நம்பி ஏமாந்து விட்டோம்.

ஆனால் தமிழ் அரசியற் கட்சிகள் பணத்திற்காகவும் பதவிக்காகவும் விலைபோகாத வகையில் நாம் இன்று முன்பை விட இன்னும் அரசியற் பலம் மிக்கவர்களாகவே உள்ளோம்.



தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு காண இக்காலத்தைவிட மிக சிறந்த காலம் தோன்றப்போவதில்லை. இந்த நிலை தமிழ் மக்கள் இலங்கையின் பல பகுதிகளில் போர்க் காலத்தில் அனுபவித்த கோர அனுபவங்கள் வழியாகவே வந்தது என்பது உண்மை.

தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் இலங்கை வாழ் த்மிழ் மக்கள் பெயரால் அன்பு வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறோம். தயவு செய்து தமிழ் மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பணயம்வைத்து அரசியல் நடத்தாதீர்கள். தமிழ் மக்கள் நலனுக்காக உங்கள் அரசியல் லாபங்கள் அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். இப்போது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டு எட்டப்படாத எந்த முடிவும் வருங்காலத்தில் எட்டப்படும் என்ற எந்த உத்தரவாதமும் இல்லை.

தமிழ் மக்களுக்கு எதிரான அல்லது சாதகமற்ற உங்கள் எந்தநிலைப்பாட்டையும் இனியும் தமிழ் மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என உறுதியாக சொல்லி வைக்க விரும்புகிறோம்.

இலங்கை நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் வாழ்கின்றன என்பதை உறுதிப்படுத்தி அவர்களின் சம உரிமையோடு வாழக்கூடிய சுதந்திர வாழ்விற்கான நீதியோடு கூடிய நிரந்தர தீர்வைக்கொண்டு வரக்கூடிய மாற்றப்பட முடியாத புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கான செயற்பாட்டிற்காக அரசியல்வாதிகள் மட்டுமல்ல சம்பந்தப்பட்ட அனைவரும் கண்டிப்பாக பயணியாற்ற வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்.

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்ற வார்த்தைகளை எமதாக்கி வாழ அழைப்பு விடுத்து இறையாசீருடன் கிறிஸ்மஸ் 2019 புது வருட வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேனாட்**
**ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ் ஆயர்.**

## எண்ணில் மறைபொருளே

விண்ணில் திருக்குமரன் -மனுவாய்
மண்ணில் பிறந்ததேனோ
எண்ணில் மறைபொருளே-நமக்கு
எட்டாத எழில் அருளே!

கண்ணின் கருமணியாய்-மரியின்
பண்ணில் மகிழ்ந்தனனோ!
உண்ணும் அமுதத்திற்காய்-உரிமை
உறவில் அழுதனனோ!

அன்னை அணைக்க அவன்-சுழன்று
ஆடி அகலுவனோ
தன்னைப் பிடிக்க வரும் - வளன்
தந்தையை நாடுவனோ

**அருட்திரு. நீ.மரியசேவியர் அடிகளார்**
**இயக்குநர், திருமறைக் கலைமன்றம்.**

>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

## நம்பிக்கை ஊட்டும் ஒளியாக

இருள் சூழ்ந்த பொழுதுகளில் ஒளியை தேடி அலையும் எல்லோர் மனங்களிலும் எதிர்பார்ப்புகள், தேவைகள் அதிகமாகும். அந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் எங்கே? எப்படி? யாரால்? நல்ல செய்தி கிடைக்கும் என உயர் நிலையில் இருப்போரிடம் இருந்து எதிர்பார்த்திருக்க, வயலில் இராக்காவல் காக்கும் சாதாரண பாமர இடையர்களுக்கு தான் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி கிடைத்தது. அவர்கள் அலட்சியப்படுத்தி இருந்திருந்தால் இன்று நாம் அதனை அனுபவிக்க முடியாது போயிருக்கும்.

"அஞ்சாதீர்கள், இதோ! எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும்நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று மெசியா எனும்மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்துள்ளார். குழந்தையை துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" என்ற வானதூதரின் வார்த்தையை நம்பின இடையர்கள் தேடிச் சென்றார்கள். கண்டு கொண்டதை மக்கள் மத்தியில் பொறுப்புடன் தெரிவித்ததை இன்றும் மகிழ்ந்து உலகமே ஒளி விழாக்களாக கொண்டாடுகின்றது.

சாதாரண பாமர் மக்களின் பொறுப்புடனான செய்திப் பகிர்வு, வாய்மொழி செய்திகள் இன்றும் பகிரப்படும் சாட்சிய வாழ்வுகள் ஒளி விழாக்களாக, வாழ்ந்து மடல்களாக நத்தார் கரோல் கீதங்களாக இன, மத, மொழி, நாடு கடந்து உண்மைக்கு சாட்சி சொல்லும் விழாக்களாக சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்வூட்டப்படுகிறது. இவ் விழாக்கள் அர்த்தம் பெற அடுத்த சந்ததியும் அறிந்து கொள்ள ஒளியாக நாம் மாறி ஒளிவிழாக்களை அர்த்தமுள்ளதாக்கி மகிழ்வோம். இருள் சூழும் சமூக சீரின்மைகளில் இருந்து ஒளியாக நாம் மாற கிடைத்த சந்தர்ப்பங்களில் நாமும் இன்றைய இடையர்களாக மாறும் நல்ல செய்தியை பகிரும் தூதர்களாக செயற்பட்டு நல்வாழ்த்துக்கள் பெறுவோம். துன்புறும் மனிதர்களின் துயர் துடைக்கும் பணிகளால் மகிழ்வூட்டி மகிழ்வோம்.

**கலாபூஷணம் செ.யோசப்பாலா**
**செயலாளர்,**
**கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்**

>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

## வையகம் வாழ அருளைப் பொழியுமையா!

நெல்லுக்குள் மணிபோல கொட்டும் பனியில்
நிலவுலகம் பார்த்திருக்கக் காய்ந்த வைக்கோல்
புல்லுக்குள் கன்னிமரி கையில் தவிழ்ந்த
பாலகனே! பொன்மகனே! நெஞ்சம் கசிந்து
கல்லுக்குள் தேரைதனை வாழ வைத்தவுன்
கருணைக்கு விலையேது மனிதம் தொலைந்து
சொல்லுக்குள் அடங்காத எம்துயர் தீர்த்து
சமாதானம் நிலவு அருள் பொழியும் அப்பா!

மந்தையுனைச் சூழதாதை சூசையோடு
மாதரசி மரியாளும் மகிழ போர்த்தக்
கந்தைகூட இல்லையப்பா! வெள்ளி யொன்று
கீழ்வானில் உதித்தெழும்ப பார்த்த மாந்தர்
சிந்தையெலாம் பூரித்து நிற்கத் தூதர் கூடி
சந்தமுடன் வானத்தில் பண்ணிசைக்க
விந்தையடா! உன்வரவு! உன்ன ருளாலே
வையகமே அமைதிகண்டு மகிழ்வு பொங்கும்!

**கலாபூஷணம்**
**கவிஞர் மு.சிங்கராயர்**

>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

## திருமகன் தேசத்தின் ஒளியானார்

திருமகன் கிறிஸ்து தேசத்தின் ஒளியாக
தேவனாய் பிறந்தாரே தொழுவோம் வாருங்கள்
கருணை வடிவாக காண்புலும் பாலகனும்
குளிரும் மார்கழியில் குடிலும் எழில்காண
இருகரமும் கூப்பியே இடையர் பலர் கூடி
இறைமகனை நள்ளிரவில் இறைஞ்சியே நின்றனரே
திருநாளாய் உலகெங்கும் தேவதாய் மைந்தனையே
தந்தையாய் தலை சாய்த்து துதிபாடி மகிழ்வோமே.

**கலைமாமணி கே.ஆர்.திருத்துவராஜா**

## பேருந்து மீது திடீர் தாக்குதல் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சாரதி படுகாயமடைந்ததுடன் தாக்குதல் மேற்கொண்ட நபர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பேருந்து சாவகச்சேரி பேருந்து நிலையப் பகுதிக்கு வந்த போது அப்பகுதிக்கு வந்த நபர் ஒருவர் தலைக்கவசத்தால் பேருந்து மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பிச் செல்ல முயன்ற போது அப்பகுதியில்நின்ற மக்களால் மடக்கி பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (இ-60)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## பெறுகை அறிவித்தல்

**2019ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு சேவை வழங்கலுக்கான விலைமனுக் கோரல்**

தலைவர் பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2019 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு (Cleaning Service) சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல. | சேவை | எதிர்பார்க்கப்படும்/ தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/04 | சுத்திகரிப்பு சேவை | 08 |

1. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்கள் வலிகாமம் தெற்கு பிரதேசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 26.12.2018 ஆம் திகதி தொடக்கம் 10.01.2019 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9 மணிமுதல் பி.ப 3 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ 2500.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. பெறுகை ஆவணங்கள் 11.01.2019 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடிவாறு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. கிடைக்கப்பெற்ற பெறுகைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**க.தர்சன், தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

(C-4822)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

128




“யானை வியாபாரம் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலம்வரை அமோகமாகத் தொடர்ந்தது. நெசவு, சாயமிடுதல், பாய்மரம் கட்டுதல், கூடை பின்னுதல், சுருட்டு, பீடித்தொழில், மட்பாண்டம், செங்கல்சுடல், தச்சுத்தொழில், தங்கம், வெள்ளி, இரும்புக் கைத்தொழில் போன்ற பாரம்பரிய வினைத்திறன் மிக்க தொழில்களும் முக்கியத்துவம் பெற்றன. இவ்வகை உற்பத்திகளுள் தையல், நெசவு, சாயமிடல் என்பன மிகப் பிரபல்யமாகவிருந்தன”

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

யானை வியாபாரம் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலம்வரை அமோகமாகத் தொடர்ந்தது. நெசவு, சாயமிடுதல், பாய்மரம் கட்டுதல், கூடை பின்னுதல், சுருட்டு, பீடித்தொழில், மட்பாண்டம், செங்கல்சுடல், தச்சுத்தொழில், தங்கம், வெள்ளி, இரும்புக் கைத்தொழில் போன்ற பாரம்பரிய வினைத்திறன் மிக்க தொழில்களும் முக்கியத்துவம் பெற்றன.

இவ்வகை உற்பத்திகளுள் தையல், நெசவு, சாயமிடல் என்பன மிகப் பிரபல்யமாக விருந்தன. மலிவான தொழிற்சக்தியைப் பயன்படுத்தி ஆடைகள் உற்பத்தி செய்வதற்காக அரசாங்கத்தினால் பருத்திச் செய்கை ஊக்குவிக்கப்பட்டது. இவற்றின் இறக்குமதிக்கான பணச் செலவைத் தவிர்க்கவே இது மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலிருந்து துணியும் இறக்குமதி செய்யப்பட்டு இங்கு சாயமிடப்பட்டு பின்னர் இந்தியாவுக்கும் வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. தையல் வேலைக்கும் நெசவுக்கும் பெரும் கிராக்கி இருந்ததனால் யாழ்ப்பாணத்துத் தீபகற்பத்துப் பெண்கள் யாழ்ப்பாண மாதர் தையல் வேலைச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினர்.

இங்கு சில சொல்லப்பட்ட வழிமுறைகளில் தையல் வேலை உற்பத்தி செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தொழில்களில் அநேகமானவை சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால் புதிய பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்தபோது எல்லாச் சாதியினருக்குமே வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன.

சில்லறை விற்பனை, சேவைத் தொழில்கள் என்பவை மூலம் வங்கி, உபசரணை, முகாமைத்துவத் துறைகளில் வேலைவாய்ப்புக்கள் கிடைத்தன. உள்ளூரில் கல்வி கற்ற மக்கள் சிவில் நிர்வாகத்தில் எழுதுவினைஞராகவும் பாடசாலை ஆசிரியராகவும் சிறப்பாகவும் பணிபுரிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

இவைதவிர பிரித்தானிய ஆரம்ப ஆட்சிக்காலத்தில் தொழிற்றுறையில் அதிக மாற்றங்கள் நிகழவில்லை. ஆங்கிலேய மொழித்திறன் இன்மையாலும் சிவில் நிர்வாக நடைமுறைகளில் அனுபவமின்மையினாலும் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம்.

பிரித்தானியர் ஆட்சியில் 1850 இலிருந்து பொருளாதாரம் விரைந்து வளர்ச்சியடைந்ததாலும் அதிகளவு கல்வி வாய்ப்புக்களினாலுமே உண்மையான மாற்றம் ஏற்படத் தொடங்கியது எனலாம்.

பணப்பயிர்ச்செய்கை, ஏற்றுமதிகள், வியாபாரம், பொருளுற்பத்தி, சிறு கைத்தொழில்கள் மூலம் தமிழர் பல வழிகளிலும் பணத்தை ஈட்டினர். இவ்வகையில் அவர்கள் சம்பாதித்துச் சேர்த்தமையால் அவர்களில் பலர் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் வசித்த தமிழர் பெரும் செல்வந்தராகினர். இதற்கும் மேலாக நிலவுடைமையாளர், முதலியார், உடையார், விதானைமார் என்போர் பல்வேறு வழிகளில் வருமானம் பெற்றனர்.

இவர்கள் பிரதானமாக நிலம் உடைமைகள் என்பனவற்றுடன் அரசாங்க ஊதியம் மூலமும் வருமானம் பெற்றனர். வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பம், பயிர்ச்செய்கை, வியாபாரச் செயற்பாடுகள் என்பவற்றில் காட்டிய ஈடுபாடு அதிகரித்ததன் காரணமாகத் தமிழரின் பொருளாதார நிலைமை மேலும் வலுப்பெற்றது.

தீபகற்பத்தில் பணப்பயிர்ச் செய்கை காரணமாக நிலத்தைப் பயன்படுத்துதல் மேலும் முக்கியத்துவமடைந்து நிலவுடைமையாளரான உயர் சாதியினர் தமிழ்ச் சமுதாயத்தில் அதிகூடிய அதிகாரம், செல்வம், செல்வாக்கு உள்ள குழுவினராகக் காணப்பட்டனர்.

ஆயினும் சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் பொருளாதார ரீதியில் தாழ்ந்த நிலையில் இருந்ததுடன் பௌதீக ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டும் ஒதுக்கப்பட்டும் போயினர். காணி விலைகள் அதிகளவு உயர்ந்ததனால் தாழ்ந்த சாதியினர் மேலும் காணியற்றவர்களாகும் நிலைமைக்கு ஆளாயினர்.

தொழிற்சந்தையில் அவர்கள் பிரவேசிக்க முடியாமலும் அவர்களுடைய கூலி குறைவாக இருந்ததுடன் சமுதாயக் கட்டுப்பாடு எப்போதும் உயர் சாதியினர் கையில்தான் இருந்தது.

எனவே பணப்பயிர்ச் செய்கையின் அறிமுகம் தமிழ் மக்களுடைய பாரம்பரியப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியதோடல்லாமல் நிலவுடைமையாளரின் பொருளாதார நிலையை வலுப்படுத்தி ஒரு புதிய உயர்மட்டக்குழு உருவாகக் காரணமாகவிருந் தது.

பின்னர் பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் இவ் உயர்மட்டக் குழுக்கள் தமது செயற்பாடுகளையும் செல்வாக்கையும் நாட்டினது சமூக அரசியல் வாழ்விலும் விரிவாக்கிக் கொண்டன.

கோல்புறூக் வியாபாரத்தின் மீதான தனியுரிமைகளையும் தடைகளையும் ஒழித்த அதே சமயம் தானியம், அரிசி, பருத்திப்பொருள் ஆகியவற்றின் மீது ஏற்றுமதி வரியைப் புகுத்தியிருந்தார்.

முடிக்குரிய காணி விற்பனை, நெல்லினால் கிடைக்கும் நிலவருமானம், உலர் தானியம், மரவிற்பனை வருமானம் என்பவற்றின் மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. இவற்றுடன் கலால் வரிகளும் முத்திரைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

(தொடரும்)



# பாலித்தீவு - பயணத்தின் அனுபவம்

06

சோ.நிக்கஜ்
அரியாலை.



மதிய உணவை முடித்துக் கொண்டு நாங்கள் பார்க்க கிளம்பிய முதல் இடம் Nusa Dua இங்கு தான் நீர் விளையாட்டுக்கள் இடம்பெறுகின்றன. அதைத்தவிர கடற்கரையில் பெரிதாக சிறப்பம்சங்கள் எதுவும் இல்லை. போய் விசாரித்ததில் விளையாட்டுக்களுக்கு யானை விலை, குதிரை விலை சொல்கிறார்கள். வெளியில் முன்பதிவு செய்து விட்டு வருவது இலாபகரமாக இருக்கும் போல தோன்றியது.

ஏற்கனவே எல்லோருக்கும் நீர் விளையாட்டுக்கள் செய்த அனுபவம் இருந்ததனால் மறுபடி அதிக விலை கொடுத்து அதை பெற்றுக் கொள்வதில் உடன்பாடு இருக்கவில்லை.

அங்கிருந்து கிளம்பி அடுத்ததாக சென்றது GWK Park எனப்படும் Garuda Wisnu Kencan Cultural park. இது கடல் மட்டத்திலிருந்து 263 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இதற்கு நுழைவுக் கட்டணமாக 125,000 IDR வசூலிக்கிறார்கள். இந்தத் தொகையில் எங்களை அழைத்துச் சென்ற வயனுக்கும் ஒரு பங்கு போயிருக்கிறது.

இங்கிருக்கும் கருடா விஸ்ணு சிலை தான் ஆசியாவின் மூன்றாவது உயரமான சிலை ஆகும். பீடத்துடன் சேர்த்து கிட்டத்தட்ட 397 அடிகள். உண்மையில் அதன் கீழே சென்று பார்த்த போது அதன் பிரமாண்டம் எம் கண்களை வியப்படைய செய்யாதது தான் ஆச்சரியம்.

இது போக கருங்கல்லைப் போல தோற்றமளிக்கும் 76 அடி உயரமான விஸ்ணு சிலையும் பிரமாண்டமான கருடன் சிலையும் தனித்தனியே அமையப்பெற்றுள்ளது.

நேர அடிப்படையில்காலை மற்றும் மாலை நேரங்களில் பறோங் நடனம் மற்றும் வேறு பல நிகழ்ச்சிகள் இங்கிருக்கும் அரங்கில் நடைபெறுகின்றன. இதையெல்லாம் கண்டு கழிக்க வேண்டுமென்றால் குறைந்தது அரை நாளாவது ஒதுக்குதல் நன்று. சும்மா ஒரு நடை போய் வருவது என்றால் இரண்டு மணி நேரம் போதுமானது.



கருடா விஷ்ணு சிலை

நேரம் மாலையை நெருங்கிக் கொண்டிருந்ததால் நாங்கள் அங்கிருந்து கிளம்பி அடுத்ததாகச்சென்ற இடம் Uluwatu Temple.

இக்கோயில் கடற்கரையிலிருக்கும் 70 மீற்றர் உயரமான மலையின் விளிம்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது 11 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியை சேர்ந்ததாகும்.

இங்கு தினமும் மாலை ஆறு மணிக்கு Kecak Dance (கெச்சக் நடனம்) இடம் பெறுகிறது. பல ஆண்கள் இணைந்து வாய் வழியாக வித்தியாசமான ஓசைகளை எழுப்பியவாறு நடனக் கலைஞர்கள் இணைந்து இராமாயணத்தின் முக்கிய ஐந்து பகுதிகளை வெளிப்படுத்துகிறார்கள். அழகிய சூரிய அஸ்தமனம் மற்றும் நயம்பிக்க ஓசையுடன் கூடிய நடனம் நம்மை துள்ளலான மனநிலைக்கு இட்டுச் செல்லும்.

குரங்குகளின் சேட்டை அதிகம் என்பதனால் உடைமைகள் மீது சற்று அதிக கவனம் வைத்திருக்க வேண்டும். கோவிலுக்குள் நுழைவதற்கு கட்டணங்கள் ஏதும் அறவிடப்படவில்லை என்றாலும் Kecak நடனத்தினை கண்டுகளிக்க வேண்டுமானால் 100,000 IDR செலுத்த வேண்டும்.

நாங்கள் அடுத்ததாக செல்ல திட்டமிட்ட இடம் Jimbaran எனும் கடற்கரையாகும். இங்கு அந்தி சாயும் பொழுதில் மாலைச் சூரியனை ரசித்தவாறு கடற்கரை மணலில் இருந்து உண்ணும் கடலுணவுச் சாப்பாடு பிரபல்யம். கடற்கரை ஓரமாக இதற்கென பல உணவகங்கள் இருக்கின்றன.

Kecak நடனம் முடிந்து நாங்கள் உளுவட்டு கோவிலில் இருந்து கிளம்புவதற்குள் நேரம் ஏழு முப்பதை தாண்டிவிட்டது. இதற்கு பின் மாலைச்சூரியனை தரிசித்தவாறு உணவருந்துவது என்பது சாத்தியப்படாத இலக்காகவே இருந்தது. ஏற்கனவே எல்லோரும் களைத்துப்போய் வேறு இருந்தோம். எனவே Jimbaran கடற்கரையை தவிர்த்து விடுதிக்கு செல்லலாம் என முடிவெடுத்தோம்.

வயனை நாங்கள் சாரதியாகத் தெரிவு செய்த போதே நாங்கள் அவரிடம் இன்றைக்கு நீங்கள் வாருங்கள் எல்லாம் சரியாக இருந்தால் இனி உங்களைத் தான் பிடிப்போம் என்று சொல்லியிருந் தோம். அதை ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டுவிட்டார்வயன்.

எங்களுக்கும் அவர் மீது நம்பிக்கை இருந்ததனால் நாளைய திட்டத்தையும் அவர் வசமே ஒப்படைத்து விட்டோம்.

அதாவதுவயன்நாளைய தினத்துக்கு கூட்டிச் செல்வதாகக் கூறி ஆறு இடங்களின் பட்டியலை தந் தார். சரி என ஒத்துக் கொண்டோம். நாளைய தினத்திற்குக் கூலியாக 600,000 IDR தர வேண்டும் என அடம்பிடித்து சாதி த்துக் கொண்டார் வயன்.

உண்மையில் இன்றைக்கு அரை நாளென பிடித்துச் சற்று அதிகமாக அவரை உலுப்பி விட்டதனால் அந்த விலை நியாயமாகவே இருந்தது.


(பயணம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1597

Search for people, places and things

### மிதுசா

முயற்சி செய்யிற அளவுக்குப் பொறுமையும் வேனும்



### திவ்வியா

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல... அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்



### வேணி

உன்வேதனை பலரை சிரிக்க வைக்கலாம்... ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக்கூட வேதனைப்படுத்தக்கூடாது



### கார்த்திகா

ஒரு சொட்டுகூட இரத்தம் வராமல் ஒருவரைக் கொன்றுவிடும் ஆற்றல்மிக்க கூர்மையான ஆயுதம் மனிதனின் நாக்குதான்



### மயூறி

எவ்வளவு அழுதாலும் சில வலிகள் குறைவதேயில்லை



### துஷி

உன் மீது உனக்கே நம்பிக்கையில்லை என்றால் கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாமல் குமாரவின் குரல் பதிவில் ஜனாதிபதி கொலைச்சதி குறித்து எந்தத் தகவல்களும் இல்லை

**(கொழும்பு)**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் தொடர் பிலான கொலைச் சதி முயற்சியை வெளிப்படுத்திய நாமல் குமார முன்வைத்த குரல் பதிவுகளில் ஜனாதிபதியையோ வேறு நபர்களையோ கொலை செய்வது தொடர்பில் எந்தவித தகவல்க ளும் காணப்படவில்லையென தெரியவந்துள்ளது.**



சிரேஷ்ட பொலிஸ் அதி காரிகள் மூவரிடையே இடம்பெற்ற கலந்துரை யாடல்களே அந்த குரல் பதிவுகளில் காணப்ப டுவதாக மேலதிக விசார ணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் குறிப்பிட ப்படுகின்றது.

நாமல் குமாரவின் குரல் பல பதிவுகள் உள்நாட்டி லும், வெளிநாட்டிலும் பரி சோதிக்கப்பட்டதாகவும் இத னடிப்படையிலேயே இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட் டுள்ளதாகவும் அத்தகவல் கள் மேலும் தெரிவித்துள் ளன.

இதேவேளை, தனக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை உறுப்பினர்க ளின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள் ளதாக நாமல் குமார நேற்று முன்தினம் அறிவித்திருந் தார்.

இருப்பினும், அவருக்கு எந்தவித எஸ்.டி.எப். பாது காப்பும் வழங்கப்பட்டிருக்க வில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## 512 கிராம் ஹெரோயினுடன் மருதானையில் ஒருவர் கைது

(மருதானை)

கொழும்பு, மருதானை புகையிரத நிலையத்திற்கு அருகில் வைத்து ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள் ளனர்.

குறித்த நபர் 512 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட நபர் 41 வயதுடைய வரென பொலிஸார் தெரி வித்தனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவரிடமிருந்து மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப் பொரு ளின் பெறுமதி சுமார் 6 மில்லியன் ரூபாவென பொலி ஸார் தெரிவித்தனர். (இ-7)

## தூய அரசியல் பயணம் பெயர்ப்பலகை திறப்பு



(பனிக்கன்குளம்)

ஜனநாயக மக்கள் விடு தலை முன்னணியின் மத் திய குழு உறுப்பினரும் வவு னியா நகர சபை உறுப்பி னருமான சுந்தரலிங்கம் காண்டீபனால் வட்டாரம் இளைஞர்களால் தெரிவு செய்யப்பட்டு மார்ச் 12 தூய அரசியல் பயணத்தில் மக்க ளால் தெரிவு செய்யப்படும் அரசியல்வாதி கொண்டிரு க்க வேண்டிய நற்குணா திசயங்களை உள்ளடக்கிய பெயர்ப்பலகை வவுனியா திருநாவற்குளம் கிராம அபி விருத்திச் சங்க மண்டபத் தில் நாட்டப்பட்டு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு திறந்து வைக்க ப்பட்டது.

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகரன் கேச வன் தலைமையில் நடைபெ ற்ற நிகழ்வில் பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி, தேர்தல் வன்முறையை கண்காணி க்கும் அமைப்பினர், நகர சபை உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிரு ந்தனர். (2-281-250)

## வசதியற்ற மாணவர்களுக்கு உதவி

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப் பினரால் அண்மையில் 13 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கனடாவில் புலம்பெயர் ந்து வசித்து வரும் தாயக உறவான பிரன்டன் பசுபதி நேசனின் நிதி உதவியிலிரு ந்து 13 வசதியற்ற மாணவர் களைத் தெரிவு செய்த தமி ழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினரான மாணிக்கம் சத்தியானந்தன் விஜயன் வேண்டுகோளிற்கு அமை வாக வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகில குமாரினால் அவரது வீட் டில் வைத்து தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த வசதிய ற்ற மாணவர்கள் 13பேரு க்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள் ளன. (2-281)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1939 - 06 - 30

மறைவு 2018 - 12 - 22

**அமரர். கணநாதன் நாகபூஷணி**

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தின் இணைப்பாளர் திருமதி.ந.ஸ்ரீதேவி அவர்களின் அன்புத் தாயார் கணநாதன் நாகபூஷணி அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், வளவாளர்கள்
மற்றும் பயிலுநர்கள்
மும்மொழிக் கற்கை நிலையம்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்.

(c-4825)


## செல்பி எடுக்க முயன்ற இளைஞன் திடீர் மாயம்

(தியலும)

தியலும நீர்வீழ்ச்சிக்கு அருகிலிருந்து கைத் தொலை பேசியில் செல்பி எடுக்க முய ன்ற இளைஞ ரொருவர் தவறி நீர் நிரம்பிய குளிக்குள் விழு ந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

கொஸ்லந்த தியலும் நீர்வீழ் ச்சியை பார்க் கச் சென்ற 29 வயதான இளை ஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

இந் நிலை யில் குறித்த சம் பவம் தொடர் பில் பொலிஸா ருக்கு தகவல் வழங்கப் பட்ட தையடுத்து, இச் சம்பவம் தொட ர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணை களை முன்னெ டுத்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 400 | 500 |
| தக்காளி | 200 | 320 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 40 |
| கோவா | 80 | 100 | 100 | 100 |
| கரட் | 140 | 160 | 160 | 200 |
| பூசணி | 80 | 40 | 40 | 60 |
| புடோல் | 100 | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 150 | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 150 | 170 | 180 | 200 |
| பீற்றூட் | 250 | 160 | 180. | 200 |
| கறிமிளகாய் | 300 | 200 | 260 | 260 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 100 | 140 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 100 |
| கீரை-1பிடி | 50 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 300 | 400 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 450 | 400 | — |
| முள்ளங்கி | 80 | 70 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 60 | 80 |



# சிறுவர் அரங்கம்

## தேனீயாக மாறிய தேவர்கள்!



ஒரு சமயம் தேவலோகத்தில், தேவர்கள் உற்சாக மிகுதியால் அளவுக்கு மீறி அமிர்தத்தை சுவைத்து மகிழ்ந்தனர். எனவே, போதை தலைக்கேறி தாம் என்ன செய்கிறோம் என்பதை மறந்து பூஜைக்குரிய பூங்காவனத்தை நாசம் செய்தனர். இச்செய்கையினால் கோப முற்ற தேவேந்திரன் அவர்களைக் கண்டித்து, "நீங்கள் செய்த இப்பாவச் செயலுக்கு பூலோகத்தில் தேனீக்களாக மாறி அங்கு காட்டிலுள்ள பூச்செடிகளிலிருந்து தேன் சேகரித்து பிழைத்துக் கொள்ளுங்கள். கஷ்டப்பட்டு உழைத்தால் உங்களுக்கு நல்ல புத்தி உண்டாகும்" எனச் சபித்தார். தங்கள் தவறை உணர்ந்த தேவர்கள், "பிரபு! நாங்கள் அறியாமல் செய்த இக்குற்றத்தை மன்னித்து தங்களுக்கு பணிவிடை செய்ய அருள்புரியுங்கள். சாப விமோசனம் அளியுங்கள்!" என்று வேண்டினர்.

"அற்பர்களே! நீங்கள் செய்ததோ மாபெரும் குற்றம். கொடுத்த சாபம் கொடுத்ததுதான். அதைத் திரும்பிப்பெற இயலாது. இருப்பினும் இச்சாபத்திலிருந்து விடுதலைபெற ஒரே வழிதான் உள்ளது. காட்டில் தேன் சேகரிக்க வரும் வேடர்கள் தீ பந்தத்தோடு தேன் அடையில் வாழும் உங்களைத் தீயால் விரட்டி தேனை தங்கள் சுரைக் குடுக்கையில் சேகரித்துக் கொள்வர். ஆனால், எவன் ஒருவன் உங்கள் வேண்டுகோள்படி தீங்கு செய்யாமல் தேனைச் சேகரித்துக் கொண்டு நீங்கள் வாழும் தேன் அடையைக் கடலில் வீசி எறிகிறானோ அப்போது தான் நீங்கள் உங்கள் சுய உருவை அடைந்து என்னை அடைவீர்கள்" என்றார் தேவேந்திரன். சாபத்தினால் தேவர்கள் தேனீக்களாக மாறி விந்தியமலை சாரல் காட்டில் தேனடையில் வாசம் செய்தனர். வழக்கம் போல் தேன் சேகரிக்கும் வேடர்கள் தீப்பந்தத்தில் கொளுத்தி தேனீக்களை விரட்டினர்.

ஒரு தேனீ தன் இனிய குரலில், "அன்பார்ந்த வேடர்களே... எங்களைத் தீ பந்தத்தில் சுடாதீர்கள். உங்களுக்கு வேண்டிய தேனைத் தருகிறேன்" என்றது. வேடர் தலைவன் இக்குரலைக் கேட்டு, "ஏதோ பிரமைபோல் தோன்றுகிறது. தேனீயாவது பேசுவதாவது!" என்று சிரித்துக் கொண்டே சென்றுவிட்டனர்.

இது வழக்க மாக நடந்து வந்தது. துன்பத்தி லிருந்து விடுதலை கிடைக்காமல் தேனீக்கள் தவித்தன. கடவுளை நினைத்து வேண்டின.

ஒரு நாள் நல்ல உள்ளம் படைத்த தர்மன் என்ற வேடன் தீ பந்தத்தோடு வந்தான். வழக்கம் போல் அவனைக் கண்ட தேனீ, "அன்பனே! கொஞ்சம் நில். நான் சொல்வதைக் கேள். உன்னைச் செல்வந்தனாக மாற்றுவேன்" என்றது. அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்த தர்மன் தான் காண்பது கனவா அல்லது நினைவா? என்ற குழப்பத்தோடு தேனீயின் வேண்டுகோள்படி தீப்பந்தத்தை எறிந்துவிட்டு அது சொல்வதைக் கேட்க இசைந்தான்.

"நண்பனே! நாங்கள் தேவர்கள். எங்கள் தலைவரின் சாபத்தால் தேனீக்களாக மாறி அல்லற்படுகிறோம். எங்களைக் காப்பாற்ற நீதான் உதவ வேண்டும். அதாவது நீ எங்கள் அருகில் வந்து எங்களுக்கு எவ்வித தீங்கும் செய்யாமல் தேனை எடுத்துக் கொண்டு எங்கள் அடையைக் கடலில் வீசி எறிந்து விடு. இதைச் செய்தால் உன்னைப் பெரிய செல்வந்தனாக மாற்றுவோம்" என்றது. "நான் உங்களுக்கு ஒரு தீங்கும் விளைவிக்கமாட்டேன். உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்" எனக் கூறி தேன் அடைக்கு அருகில் சென்றதும் சுரைக் குடுக்கையில் தேன் தானாக நிரம்பியது. உடன் தேன் அடையை எடுத்து கடலில் வீசினான். அடுத்த நிமிடமே தேனீக்கள் தேவர்களாக மாறினர்.

"நண்பனே! நீ தினந்தோறும் நாங்கள் வசித்த மரத்தடியில் உன் சுரை குடுக்கையை வைத்தால் அது நிறைய தேவாமிர்த தேன் நிரம்பும். அதை அருந்துபவர்கள் எந்த நோயால் அவதியுற்றாலும் அதிலிருந்து நிவாரணம் பெற்று சுகம் பெறுவார்கள். அதனால் நீ மேன்மை அடைவாய்!" எனக் கூறி மறைந்தனர்.

அதன்படி தர்மனும் தினந்தோறும் மரத்திலிருந்து தேனைச் சேகரித்துக் கொண்டு நகரத்தில் பெரிய தனவந்தர்களுக்கு தன் தேவாமிர்தத் தேனை அளித்து அவர்களை நோயிலிருந்து விடுவித்து சுகம் பெறச் செய்தான். இத்தேனைப் பருகியதால் இளமை தோற்றம் கொண்டனர் பலர். மக்கள் ஆதரவினால் தர்மன் பெரிய செல்வந்தனாக மாறினான்.

தர்மனின் அருகில் வசித்த அவன் இனத்தைச் சேர்ந்த மார்க்கன் என்ற மற்றொரு வேடன் தர்மனின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமை கொண்டான். நானும் தான் தேன் சேகரித்து வருகிறேன். ஆனால், தர்மன் கொண்டு வரும் தேன் எப்படி தேவாமிர்தமாகிறது. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது எனச் சந்தேகம் கொண்டு ஒரு நாள் தர்மன் காட்டிற்குச் செல்லும் போது அவன் அறியாமல் மார்க்கனும் அவனைப் பின் தொடர்ந்தான். தர்மன் மரத்தடியில் தேன் சேகரித்துச் செல்வதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டு அதுபோல் தேன் எடுத்து தானும் செல்வந்தனாக மாறலாமென்று அவனைப் பேராசை ஆட்கொண்டது.

பொறாமையும் பேராசையும் மார்க்கனை வழி தவறச் செய்தது. ஆகவே, யாவரும் அறியாமல் தன் குடுக்கையை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக மரத்தடியை அடைந்தான். நற்குணம் கொண்ட தர்மனுக்குத்தான் தேவர்கள் அருள் புரிந்தனர். பேராசை பிடித்தவர்களுக்கல்ல.. அதனால் மார்க்கன் மரத்தடியில் குடுக்கையை வைத்ததும் தேனீக்கள் எங்கிருந்தோ கூட்டமாக வந்து அவனைச் சூழ்ந்து கொட்டின. வலி தாங்காமல் ஓட்டம் பிடித்தான் மார்க்கன். அப்போதும் அவனை விட்டபாடில்லை. "கடவுளே நான் செய்தது தவறு தான் என்னைக் காப்பாற்றுங்கள்!" எனக் கூறினான்.

தேனீக்கள் மறைந்தன. ஆனால் தேனீக்கள் கொட்டிய வேதனை தாங்காமல் தர்மனின் காலில் விழுந்து பேராசையால் தான் செய்ததைக் கூறி தன்னை மன்னிக்கும் படியும் தன் வேதனையைப் போக்கும்படியும் வேண்டினான். நற்குணம் படைத்த தர்மன், "நண்பா! நீ செய்த தவறை உணர்ந்து மன்னிப்புக் கோருகிறாய். கவலைப்படாதே!" என்று ஆறுதல் கூறி தன் தேவாமிர்த தேனைக் கொடுத்து பருகச் செய்தான். அடுத்த நிமிடமே அவன் வேதனை மறைந்தது.

பிறகு அவனுக்கு நல்வழி கூறி, "பிறருக்கு அன்பு காட்டி உதவி செய்தால் நீ உயர் அடைவாய். இந்தப் பணப்பை கொண்டு நேர்மையாய் உன் தொழிலை செய்!" என்று அறிவுரை கூறினான். மார்க்கனும் திருந்தி மக்களிடம் பாராட்டுப் பெற்று மேன்மை அடைந்தான்.

## நற்சிந்தனை விதைகள்

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"- திருக்குறள்

- தாழ்வான எண்ணங்களை நீக்கி உயர்வான எண்ணங்களை விதை !
- பழைமையான எண்ணங்களைக் கொண்டு புதுமையான எண்ணங்களை விதை!
- பழைமையான உணர்வு நூல்களை மாற்றி புதுமையான உணர்வு நூல்களை விதை!
- அன்பான எண்ணங்களைக் கொண்டு அன்பான உள்ளங்களை விதை!
- ஆசையான எண்ணங்களைக் கொண்டு ஆசையான பண்புள்ளம் விதை!
- சிந்தனை எண்ணங்களைக் கொண்டு சிந்தாத தூய்மை எண்ணங்களை விதை!

## சிந்தனைத்துளி

- தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாறிப் போகிறான்.
- செய்வதற்கு எப்போதும் வேலை இருக்கவேண்டும். அப்போது தான் முன்னேற முடியும்.
- அன்பையும் ஆற்றலையும் இடைவிடாது வெளிப்படுத்துகிறவர் ஆர்வத்துடன் பணிபுரிவர்.
- வெற்றி பெற்றபின் தன்னை அடக்கி வைத்துக்கொள்பவன், இரண்டாம் முறையும் வென்றவனாவான்.
- தோல்வி ஏற்படுவது, "அடுத்த செயலைக் கவனமாகச் செய்" என்பதற்கான எச்சரிக்கை.

அன்பு செலுத்த உத்தரவிடுவதே
எனது இறுதிக் கட்டளை.

- இயேசு நாதர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மானிடத்தின் வாழ்வுக்கான இயேசு பிரானின் பிறப்பு

இயேசு பாலகனின் பிறப்பை உலகம் முழுவதும் கொண்டாடி மகிழ்கிறது.

பாவத்திலிருந்து இந்த உலகை மீட்பதற்காக பிறப்பெடுத்த இயேசு பாலகன் மானிடத்தின் விடிவுக்காக பாவத்தைத் தானே சுமந்தார்.

காட்டிக் கொடுப்புகள், நீதியற்ற தண்டனைகள், சிலுவையில் அறைந்த கொடுமைகள் என எல்லாவற்றையும் தாங்கிக் கொண்ட இயேசு பாலகன் தன் திருப்பாடுகளின் மூலம் இந்த உலகுக்கு உண்மைச் செய்திகளைச் சொல்கிறார்.

ஓ! மானிடப் பெருமக்களே! இந்த உலகம் எப்பேற்பட்டது தெரியுமா? கூட இருந்தே குழி பறிக்கும் பாவத்தைக்கூட கூசாமல் செய்ய வல்லது.

வெள்ளிக்காசுக்காகக் காட்டிக் கொடுக்கின்ற கயமைத்தனத்தை மிகச் சாதாரணமாகச் செய்து விடக்கூடியது.

நம்பிக்கைத் துரோகங்களுக்கும் பஞ்சம் இருக்காது. மக்களின் அவலத்தையும் துன்பத்தையும் தங்களின் சுயஇலாபத்துக்கான மூலதனமாக ஆக்கிக் கொள்கின்ற துரோகத்தனங்களே தூய்மையானவர்களின் அடையாளமாக நம்பப்படும்.

அதனால்தான் என் பிறப்பின் ஊடாக, சிலுவையைச் சுமக்கும் வலியினூடாக, சிலுவையில் அறைபட்டு சிந்துகின்ற என் குருதியினூடாக இந்த உலகமும் மனித குலமும் பாவத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

மனித குலம் பாவம் இழைக்க முற்பட்டால், தேவகுமாரனாகிய நான் வதைபட்டது போலவே நல்லவர்கள், தூயவர்கள், புனிதமானவர்கள் எனப் பலரும் வேதனைப்படுவர்.

இதுவே இந்த உலகின் அழிவுக்கான பாவத்தின் பாரமாகும்.

ஆகையால் என் வாழ்வில் இருந்து, என் திருப்பாடுகளில் இருந்து; நான் பட்ட வலியில் இருந்து நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள், திருந்திக் கொள்ளுங்கள்.

பாவம் என்ற இருளைப் புரிந்து கொண்டு அதனின்றும் நீங்கிக் கொள்ளுங்கள். பாவம் ஒருபோதும் உங்களை விட்டு விடாது. அந்த இருளுக்குள் நீங்கள் அகப்படாமல் புண்ணியம் எனும் ஒளிமயத்தை நோக்கி உங்கள் வாழ்வுப் பயணத்தை ஆக்கிக் கொள்ளுங்கள்.

உங்களின் அந்தப் பயணம் உங்களை இறைபதத்திடம் சேர்க்கும்.

இதுவே இயேசு பிரானின் பிறப்பும் வாழ்வும் மரிப்புமாகும்.

எனினும் இன்றைய உலகம் உண்மையைப் புரிந்து கொள்ள மறுக்கிறது. உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற திருவாக்கு மறைந்து போன சொல்லாகிவிட்டது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் உலகை மீட்க வந்த இயேசு பிரானின் வாழ்வு வேதனையாக மட்டுமே நம்மிடம் சீவிக்கிறது.

இயேசு பிரானின் போதனைகளும் அவரின் வாழ்வியலும் என்றைக்கு மனித குலத்தின் நடைமுறை வாழ்வாக அமைகிறதோ அன்று தான் இயேசு பாலகனின் பிறப்பை நாம் கொண்டாடுவது இறைமகனுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கும்.

# அனைவரையும் ஒன்றிணைத்து தேர்தலை வெற்றி கொள்வோம்

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுவதுடன், எதிர்வரும் தேர்தலை வெற்றி கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின்பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய எமது அரசாங்கத்தில் காணப்படும் குறைபாடுகள், பிரச்சினைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுவதுடன், எதிர்வரும் தேர்தலை வெற்றி கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டின் அரசியல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மாதாந்தம் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். இந்த வருடத்திற்கான இறுதிக் கூட்டமே இன்று (நேற்று) நடைபெற்றது. ஜனவரி மாதமும் இந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

முக்கியமாக அடுத்து வரும் தேர்தலை வெற்றி கொள்வதற்கான விரிவான நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து நாம் எதிர் காலத்தில் கவனம் செலுத்த வுள்ளோம்" என மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஹன்சார்ட் திரிபுபடுத்தல் குற்றப்புலனாய்வுப்பிரிவில் கம்மன்பிலவின் கட்சியினர்

(கொழும்பு)

மாற்றப்பட்ட ஹன்சார்ட் அறிக்கையை வெளியிட்ட தர்க குற்றம் சுமத்தி, சபாநாயகருக்கு எதிராக பிவித்துரு ஹெல உறுமய (கம்மன்பிலவின் கட்சி) தாக்கல் செய்த முறைப்பாட்டின் மேலதிக விசாரணைக்காக, அந்த கட்சியின் உறுப்பினர்கள் நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் நெருக்கடி காலத்தில் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அமைச்சரவைக்கு எதிரான அவநம்பிக்கைப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு குறித்த நாடாளுமன்ற பதிவேடான ஹன்சார்ட்டை திரிபுப்படுத்தியதாக அந்த கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

குறித்த முறைப்பாடு நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொழும்பு குற்ற விசாரணை பிரிவில் முன்வைக்கப்பட்டது.

தற்போது இந்த விடயம் குறித்த மேலதிக விசாரணைக்காக, குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கறுப்பு ஊடகப் போர்வையில் ரணிலின் ஊடக அச்சுறுத்தல் மீண்டும் ஆரம்பம்- தே.சு.மு.புகார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக செய்தி வெளியிடும் ஊடகங்களை கறுப்பு ஊடகங்களென அடையாளப்படுத்த முயற்சிக்கிறார் எனக் குற்றஞ் சாட்டிய தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளர் சட்டத்தரணி கபில கமகே, ரணில் விக்கிரமசிங்கவின் ஊடக அச்சுறுத்தல் மீண்டும் ஆரம்பித்து விட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார்.

அண்மையில் மீண்டும் பிரதமராக பொறுப்பேற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடகளையும் மீள ஆரம்பித்துள்ளார்.

கறுப்பு ஊடக வலையமைப்புகளுக்கு எதிராகவும் யோசனை ஒன்று நிறைவேற்றப்படும் என பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோல மேற்படி ஊடகங்களிடம் இழப்பீடு கோருவேன் என்றும் அச்சுறுத்தியுள்ளார். இது பிரதமருக்கு பொருத்தமற்ற செயலாகும். கறுப்பு அமைச்சரவையை நடத்துகின்ற பிரதமர் கறுப்பு ஊடகங்களை தேடுகிறார்.

பிரதமரை விமர்சித்தால் அவற்றை கறுப்பு ஊடகங்கள் என்று கூறுகிறீர்களா? அல்லது இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தும் முயற்சிக்கு தடையாக இருக்கும் ஊடகங்களையும், சிங்கப்பூர் ஒப்பந்தத்துக்கு எதிராக செயற்படும் ஊடகங்களை கறுப்பு ஊடகம் என அடையாளப்படுத்துகிறீர்களா?

எட்கா ஒப்பந்தம், பிணை முறி விவகாரம் பற்றி கூறிய ஊடகங்களை கறுப்பு ஊடகங்கள் என்று அடையாளப்படுத்த வேண்டாம். பிரதமரின் தவறுகளை அவர் முன்னிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியதால் ஊடகங்கள் கறுப்பு ஊடகங்கள் ஆகிவிடாது.

அதனால், ரணிலின் புர்வையில் கறுப்பு ஊடகங்களாக இருப்பவற்றை முடக்காமல் தனது செயற்பாடுகளை சீர்படுத்திக் கொள்ளுமாறு கோர விரும்புகின்றேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னரும் ஊடகங்களை அச்சுறுத்தியுள்ளார், அவ்வாறான நிலையில் மீண்டும் பிரதமராகியுள்ள அவர் ஊடகங்கள் மீது அச்சுறுத்தல் விடுப்பதை நாம் அனுமதிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வடக்கில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குங்கள்

### கல்வியமைச்சர் காரியவசம் பணிப்புரை

வட மாகாணத்தில் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு, நிவாரண உதவிகளை வழங்குவதற்கு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான பாடசாலை சீருடை மற்றும் சப்பாத்துக்கள் என்பவற்றுக்கான வவுச்சர்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

### காணிப்பதிவாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவகத்தின் கரும பீடங்களில் விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை அறியத் தருவதோடு 01.01. 2019 தொடக்கம் வழமை போல் மாவட்டப் பதிவகத்தின் அனைத்துச் சேவைகளும் இடம்பெறும்எனயாழ்ப்பாணம் காணிப்பதிவாளர் ச.குணாஜினி அறிவித்துள்ளார். (இ)

## பண்டிகைக்காலத்தில் வீதி ஒழுங்கை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வீதி ஒழுங்கை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் இந்திக ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

இதற்காக விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன். விசேட போக்குவரத்து நடைமுறைகளும் பின்பற்றப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5ஆம் திகதி வரை இந்த விசேட நடவடிக்கைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்படும் எனவும் மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் மீதும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் நவம்பர் மாதம் வரை இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 2,609 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தெளிவான முடிவு

- எந்த முடிவாக இருந்தாலும் அதில் தெளிவான முடிவுகளாக இருக்கவேண்டும். அந்த முடிவில் வெற்றி பெற அது சம்பந்தமான செய்திகளையும் செயல்களையும் குறித்துக்கொள்ள வேண்டும்.
- யோசனைகளையும் ஆலோசனைகளையும் சேகரித்து நடைமுறைக்கு சாத்தியமானதாக இருந்திட வேண்டும்.
- தவறான முடிவாகவோ கருத்தாகவோ இருந்தால் அதைத் தவிர்த்திட வேண்டும். நம் முடிவு சரியாக இருந்தாலும் பிறருக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இருந்திட வேண்டும்.
- முடிவெடுக்கும் முன்பு எல்லாவற்றையும் சரி பார்த்து தீர்வும் சரியானதாக இருந்தால் நல்ல முடிவிற்கு வாருங்கள். இறுதியில் அது அர்த்தமுள்ளதாகவும் நல்ல முடிவாகவும் இருந்தால் தெளிவான முடிவாகும்.



வலைப்பந்தாட்ட தேசிய வீராங்கனை செல்வி சி.தர்ஜினி மற்றும் செ.எழில் ஆகியோருக்கான கௌரவிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈவினை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் விளையாட்டு வீரர்கள், விருந்தினர்கள் அழைத்து வருவதையும் வீராங்கனைகள் கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சக்தி

# சர்வதேச போட்டிகளுக்கு நான் புதிது நோபோல் சர்ச்சையில் சிக்கிய நடுவர்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் தனது தீர்ப்பு தவறானது தான் என ஒப்புக்கொண்டுள்ளார் வங்கதேச நடுவரான தன் வீர் அகமது.

பங்களாதேசுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட மேற்கந்திய தீவுகள் அணி, மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரைகைப் பற்றியது.

இப்போட்டியின் போது மேற்கிந்திய தீவுகள் அணி வீரரான ஓசானே தாமஸ் பந்து வீசும் போது இரண்டு முறை நோபால் என பங்களாதேஷ நடுவரான தன்வீர் அகமது அறிவித்தார்.

இரண்டாவது முறையின் போது,. மேற்கிந்திய தீவுகள் அணியின் அணித்தலைவர் கார்லோஸ் பிராத்வெயிட் எதிர்ப்பு தெரிவித்தார்.

மேலும் இரண்டு பந்துகளும் நோபால் அல்ல என ரீப்ளேயில் தெரியவந்ததால், கார்லோஸ் பிராத்வெயிட் கோபப்பட போட்டி 8 நிமிடம் தாமதமானது.

இந்நிலையில் இது குறித்து பேசிய நடுவர் தன்வீர் அகமது, பந்து வீச்சாளர்கள் வேகமாக பந்து வீசும்போது லைனில் சரியாக காலை வைக்கிறார்களா என பார்ப்பது கடினம்.

சர்வதேச போட்டிகளுக்கு நான் புதிது, முதல்தர போட்டிகளில் இதுபோன்று என் மீது புகார்கள் இல்லை.

அன்று எனக்கு மோசமான நாளாக அமைந்துவிட்டது. அதைப்பற்றியே சிந்தித்து கொண்டிருக்கிறேன். விரைவில் மீண்டும் வருவேன் எனத் தெரிவித்துள்ளார். (க)

# அரியாலை சுதேசிய விளையாட்டு விழா நாளை

அரியாலை மக்களால் பாரம்பரியமாக்க் கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டுப் பயணம், நூற்றாண்டு விழாவின் உள்ளூர் போட்டிகள் நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகிறது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திற்கு காலை 9.30 மணிக்கு சமூகமளிக்குமாறு கலைத்தலைவர் ப.ஸ்ரீஸ்கந்தன் கேட்டுள்ளார். முற்பகல் 10 மணிக்கு மொழித்திறன் தமிழ், முற்பகல் 11.30 மணிக்கு மொழித்திறன் ஆங்கிலம் ஆரம்பமாகும். (க)

# சராசரி ஆடுகளம் ஐ.சி.சி; கடுப்பான சச்சின் டெண்டுல்கர்



ஒவ்வொரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி முடிந்ததும் அந்த ஆடுகளத்தின் தன்மை எப்படி இருந்தது என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சொல்வது வழக்கம். இதன்படி இந்தியா-அவுஸ்திரேலியா இடையிலான 2 ஆவது டெஸ்ட் நடந்த பெர்த் ஆடுகளம் குறித்து பெரிய அளவில் திருப்தி அடையாத ஐ.சி.சி., 'சரா சரியான ஆடுகளம்' என்று கூறியது. இதற்கு இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சச்சின் டெண்டுல்கர் தனது டுவிட்டர் பக்கத்தில், 'டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடுகளங்கள் தான் முக்கிய பங்கு வகிக்கின்றன. டெஸ்ட் கிரிக்கெட்டை மேம்படுத்தவும், சுவாரஸ்யத்தை உருவாக்கவும் பெர்த் போன்ற ஆடுகளங்கள் தான் தேவையாகும்.

துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்து வீச்சாளர்களின் உண்மையான திறமையை சோதித்து பார்க்கக்கூடிய ஆடுகளமாக அது அமைந்தது. அதனால் இதை சராசரி ஆடுகளம் என்று சொல்வது சரி அல்ல' என்று பதிவிட்டுள்ளார். (க)

# இந்தியாவுடனான போட்டி களமிறங்கியே தீருவேன்

## அவுஸ்திரேலிய வீரர் அதிரடி

தன் விரலை வெட்டினால் மட்டும் தான், இந்தியாவுக்கு எதிரான பொக்ஸிங் டே டெஸ்டில் பங்கேற்க முடியாத நிலை ஏற்படும் என அவுஸ்திரேலிய வீரர் ஆரோன் பின்ச் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி 3 இருபது-20, 4 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில், இந்திய அணி வென்றது. பெர்த்தில் நடந்த இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரை 1-1 என சமன் செய்தது.

இந்நிலையில் இரு அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி நாளை மெல்பேர்னில் தொடங்குகிறது.

இந்நிலையில் பெர்த் டெஸ்டின் போது, வலது ஆள்காட்டி விரலில் காயம் ஏற்பட்ட பின்ச், மூன்றாவது டெஸ்டில் நிச்சயமாக பங்கேற்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

பின்ச் கூறுகையில், பெர்த்தில் முதலில் காயம் ஏற்பட்டபோது என் விரல் வெடித்து விடும் போல இருந்தது. பட்ட இடத்திலேயே படுவது போல கடந்த சில மாதமாகவே அதே விரலில் மீண்டும் மீண்டும் காயம் ஏற்பட்டது.



இரண்டு ஆண்டுக்கு முன் இலங்கை அணிக்கு எதிரான போட்டியிலும் அதே விரலில் தான் காயம் ஏற்பட்டது.

அதனால், இது எனக்கு பழகிவிட்டது. பாக்ஸிங் டே டெஸ்ட் போட்டி என்பதாலும், சொந்த ஊர் மக்கள் மத்தியில் நடக்கும் டெஸ்ட் என்பதாலும் ஒரு வேளை என் விரலை வெட்டினால் தவிர, எக்காரணத்துககாவும் நான் இந்த போட்டியை தவறவிட மாட்டேன் என கூறியுள்ளார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## வெள்ள அனர்த்தத்தால் பாதிக்...

றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் கிளிநொச்சியில் நேற்று திங்கட்கிழமை விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையால், கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட பல்வேறு இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். விவசாயக் காணி, சொத்துக்கள் என்பன அழிவடைந்துள்ளன.

இதுதொடர்பில் ஆராய்வதற்கே அரசாங்கம் என்ற ரீதியில் நாம் வந்துள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான பணிகளை மேற்கொள்ள நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நட்டஈடு பெற்றுக்கொடுப்பது உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும். முப்படையினர், பொலிஸார் மற்றும் சில அமைப்புக்களும் எமக்கான ஒத்துழைப்புக்களை வழங்கிக்கொண்டிருக்கின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## நல்லூர், சாவ...

டிற்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு உறுப்பினர்களின் அங்கீகாரம் பெறும் விசேட அமர்வு நேற்று மாலை 2.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை சபா மண்டபத்தில், தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் 2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் கடும் வாக்குவாதங்களுக்கு மத்தியில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஐந்து உறுப்பினர்களின் எதிர்ப்பினைச் சம்பாதித்து நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-30)

## கிளிநொச்சி...

தின் பாதிப்பு தொடர்பில் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

அத்துடன் இதுவரையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பிலான விபரத்தை தனக்கு அனுப்புமாறு அரசாங்க அதிபர்களிடம் கோரியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்களை விரைவில் வழங்க ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கதைத்து நடவடிக்கை எடுப்பதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை எதிர்கட்சித் தலைவரின் அலுவலம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கர்ப்பிணியை...

யில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கர்ப்பிணிப் பெண் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த திருடர்கள் கர்ப்பிணிப் பெண்ணை உதைத்து விழுத்தி தாலிக்கொடியினை அபகரித்து சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த பெண் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அண்மையிலும் மீசாலைப் பகுதியில் நான்கு வழிப்பறிகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-89)

## மதுபான நிலை...

ராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்றையதினம்சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபடும் அனைத்து மதுபானசாலைகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## வடக்கு அபி...

தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடும் வகையில் நேற்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மத்தும பண்டார கிளிநொச்சிக்கு விஜயம் செய்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இவ்விடயம் தொடர்பில் கேட்டபோது, வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது தொடர்பில் பிரதமரிடம் பல நிபந்தனைகள் விடுக்கப்பட்டுள்ளது

இதுதொடர்பாக பிரதமர் பதவி யேற்றதன் பின்னர் ஒரு பேச்சுவார்த்தை நடந்துள்ளது. வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பான இறுதித் தீர்மானம் ஒன்றை எட்டுவதற்கு இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஒரு ஒழுங்கு முறை ஒன்றினை இதன் மூலம் ஏற்படுத்தி அதன்படி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-315)

## குடும்ப பெண்...

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நல்லூர் வைமன் வீதியில் நேற்று இரவு 7.00 மணியளவில் ஸ்கூட்டிவகை மோட்டார் சைக்கிளில் தம்பதியினர் இருவர் பயணம் செய்துள்ளனர்.

இதனை அவதானித்த இருவர் குறித்த தம்பதியினரை பல்சர் வகை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து அவர்களை தாக்கி விட்டு சங்கிலியை அபகரித்துள்ளனர்.

இதன் போது சங்கிலியுடன் அவர்களின் பென்டனும் காணாமல்போன தாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

# மகிந்தவுக்கு அச்சப்படாத நான் மைத்திரிக்கு அச்சப்படுவேனா?

## சரத் பொன்சேகா கேள்வி

(கொழும்பு)

புதிய அமைச்சரவையில் அமைச்சரவை பதவி வேண்டும் என்றால் மன்னிப்பு கோருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக் கொண்டதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாவனல்ல பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சி சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அத்தோடு ஒரு அமைச்சு பதவியை பெற்றுக்கொள்வதற்காக நான் ஒருபோதும் ஜனாதிபதியிடத்தில் மன்னிப்பு கோரமாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மீதான கடுமையான விமர்சனத்தை அடுத்து புதிய அமைச்சரவையில் அமைச்சு பதவியை வழங்க ஜனாதிபதி மறுப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கூட்டமைப்...

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இது 30 வருடங்கள் யுத்தம் இடம்பெற்ற ஒரு நாடாகும். வடக்கு - கிழக்கிலிருந்து எந்தவொரு தமிழரும் அமைச்சுப் பதவிகளை பெறவில்லை.

இன்று அவ்வாறு இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுகிறது. இது உண்மையில் வரவேற்கத்தக்கதாகும்.

இனவாத அடிப்படைவாதிகள் தான் இதனை பாரிய ஒரு விடயமாக பார்க்கிறார்கள். ஆனால், எமக்கும் அவர்களுக்கும் இடையில் எந்தவொரு இரகசிய உடன்படிக்கையும் இல்லை.

அரசமைப்புக்கு முரணாக எதையும் யாருக்கும் வழங்கிவிட முடியாது. அவ்வாறு நாம் செய்யவும் மாட்டோம். இவையனைத்தும் அப்பாவி மக்களை முட்டாளாக்கும் செயற்பாடாகும் என்றார். (ம-3)

## வடக்கில்...

பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

அதேபோல், மட்டக்களப்பு முதல் திருகோணமலை மற்றும் காங்சேன்துறை ஊடாக மன்னார் வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் அதிகரித்து வீசக்கூடும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## வடக்கில் வெள்...

தங்க வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 39 ஆயிரத்து 932 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாண மாவட்டம் மருந்தன்கேணி பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 652 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை மாலை 6.00 மணிவரையான நிலவரப்படி இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ். பல்கலைக்...

வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு உதவும் வகையில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொருட்களை நேற்றைய தினம் குறித்த பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் பல்கலைக்கழக மாணவர்கள் கையளித்துள்ளனர். (ம-3)

## பிரபாகரனின் ஆசைகளுக்கு...

இதற்காகவே, ரணிலின் பிரதமர் பதவியை விடவும், சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் காப்பாற்ற அந்த சக்திகள் ஒன்றிணைந்து போராடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை அகுரஸ்ஸயில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

மேற்குலகம் அணிதிரண்டு, பிரபாகரனைக் காப்பாற்ற வேண்டுமென கூறியபோது, அமெரிக்க விமான மற்றும் கடற்படை அதற்கு தயாராக இருந்தபோது, நாம் முல்லைத்தீவினை நோக்கி படையெடுப்போம் என முதுகெலும்புடன் தீர்மானம் எடுத்த தலைவர் மகிந்த.

அவ்வாறான ஒரு தலைவரே, நாடு குறித்துச் சிந்தித்து பதவியை விட்டுக்கொடுத்தார். நீங்கள் தேர்தல் குறித்தும், எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்தும் கேட்கலாம்.

இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து மாத்திரம் அல்ல, மகிந்தவை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் அகற்றவே முயற்சிக்கின்றனர்.

ஏன் இந்த வைராக்கியம்? மகிந்த இந்த நாட்டிற்கு என்ன பாவம் செய்தார்? அவரை பாராளுமன்ற பதவியிலிருந்து அகற்றி, சிறையில் அடைத்து, ஓரத்தில் தூக்கிவீசும் தேவை யாருக்கு இருக்கிறது?

2009 மே 19 ஆம் திகதி அதிகாலை முடிவடைந்த யுத்தத்தில், பிரபாகரன் எதனைச் சிந்தித்தாரோ, எதனை யோசித்தாரோ அதற்கு உயிர்கொடுக்கவே இவர்கள் முயற்சிக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து காப்பாற்ற முயற்சித்ததை விடவும், சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் காப்பாற்ற மேற்கத்தேய சக்திகள் ஒன்றிணைந்து போராடுகின்றன என்றார். (ம-3)

## காணவில்லை

### கந்தையா சிவராசா (வண்டன்)



கந்தையா சிவராசா (வண்டன்) என்பவர் நேற்று மாலை 6.00 மணியளவில் இருந்து காணவில்லை. இவருடைய வயது 68. சித்த சுயாதீனம் அற்றவர். நீல நிற ரீசேட்டும் சாரமும் அணிந்துள்ளார். கலட்டி அம்மன் கோவில் யாழ்ப்பாணம் அருகாமையில் தான் அவருடைய இல்லம். இவரை கண்டவர்கள் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு : 077 632 7598, 077 255 7633**

(6804)

இல.62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.


சுபிரி வாசனா
திகதி 2018/12/24
சீட்டிழுப்பு இலக்கம் 1389
எழுத்து 05 வெற்றி இலக்கம் 03 40 57 66 36 35
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/12/24
சீட்டிழுப்பு இலக்கம் 3818
ஆங்கில எழுத்து C வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 1 9 6 7 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 1983
ஆங்கில எழுத்து Z வெல்லப்பட்ட இலக்கங்கள் 17 18 25 38
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24.12.2018
சீட்டிழுப்பு இலக்கம் 322
வெற்றி எழுத்து M சுப்பர் இலக்க 26 வெற்றி இலக்கங்கள் 15 56 59 74
தேசிய லொத்தர் சபை

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் மானிப்பாய் LB ஃபினான்ஸ்ற்கு முன்னால் மூன்று கடைத் தொகுதிகளைக் கொண்ட இரு மாடிக் கட்டடம் உடன் விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவையில்லை**

**தொடர்புகளுக்கு : 077 231 5521**

(C-4828)

## விற்பனைக்கு

மந்திகை வைத்தியசாலைக்கு அண்மையில் பிரதான வீதியில் இருந்து 200 M தூரத்தில் 51 முதுபனைகளுடன் 5 பரப்பு சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு : 077 981 0961** (C-4830)

## TECHNO WORLD

**A/L தொழில்நுட்ப பிரிவு**

**A/L - 2021 ஆரம்பமாகிவிட்டது**

**077 017 5346** (C-4831)

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



| | |
|---|---|
| UK- 550 | /=Kg |
| கனடா-900 | /=Kg |
| ஜேர்மனி- 700 | /=Kg |
| நெதர்லாந்து-700 | /=Kg |

DELIVERY IN 3-5 DAYS

●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS (C-4652)


மஞ்சவனப்பதி முருகன் துணை

## விசேட விலைக்கழிவு

நத்தார் தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் சீனி, மா, அங்கர் தவிர்ந்த ஏனைய பொருட்களை 3000/- ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 10% விலைக்கழிவும் 5000/- ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 10% விலைக்கழிவும் எமது நிறுவனத்தில் இருந்து 6km தூரத்திற்குள் வசிப்போருக்கு பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

## விசேடமாக பாடசாலை

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நத்தார் புதுவருட தின வாழ்த்துக்கள்



மாணவர்களுக்கான தரமான கொப்பிகள், புத்தகப்பை மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கும் 10% விசேட விலைக்கழிவு உண்டு.

**தொலைபேசியிலும் பொருட்களை ஓடர் செய்யலாம்**

**(24 மணித்தியால சேவை)**

தொடர்புகளுக்கு :

**SUNJEYS A to Z SUPER MART**

**100, ARASADY ROAD, JAFFNA.**

(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

**021 205 3077**

(C-4821)

## FALC FRENCH LANGUAGE CENTRE

## பிரெஞ்சு

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456/0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(C-4807)

## அறிவித்தல்

**அதிபர் சேவை கிரகித்தல் வகுப்பு**

புதன், வியாழன் பி.ப. 5.00 – 7.30 வரை

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெறும்

## INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Srilanka

Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure

OFF. NO :- 021 222 3641 FAX. NO :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

### Diploma Courses

(06 Month)

- Dip. in Microsoft Office
- Dip. in Desktop Publishing
- Dip. in Information Technology
- Dip. in Computer Programming

### Online Course

(06 Month)

- Dip. in PC Application & Office Management

### Workshop

(20 Hours)

- Internet & e- mail
- Webpage Designing & Development

### Languages

(06 Month)

VB.net PHP

C Sharp Java

விண்ணப்ப படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

ITP

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 25.01.2019

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 26.01.2019

127,K.K.S. Road, Jaffna, Srilanka. (C-4818) - Executive Officer -

## திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

## இந்தியன் செலக்ஷனின்

**நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி**

### புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500/=~~ | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000/=~~ | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500/=~~ | 1000/= |

**10% - 50% வரை விலைக்கழிவு**

15000/=பெறுமதியான பட்டுச் சாறி ஒன்றை கொள்வனவு செய்து 5000/= பெறுமதியான சாறி ஒன்றை இலவசமாக பெற்றிடுங்கள்



**லெகீன்ஸ்**

**3 இற்கு 1000/=**

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.

**ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்**

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

**காலம் : 14.12.2018 - 31.12.2018 வரை**



(C-4826)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.